Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 17 (14.10.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:14

குழந்தையுடன் வைத்தியசாலை சென்று திரும்பிய

## குடும்பப் பெண்மீது படையினர் பாலியல் வல்லுறவு முயற்சி!

### மணற்காட்டுப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டுப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் மீது, படையினர் பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுக்காலை 10.30 மணியளவில், மணற்காட்டிலுள்ள சவுக்கங்காட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது - நேற்றுக்காலை தனது கைக் குழந்தையுடன் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பப் பெண்ணை, இரண்டு படையினர் சவுக்கங் காட்டுக்குச் செல்லுமாறு வற்புறுத்தினர். பெண் மறுக்கவே, அவரது கைக் குழந்தையைப் பறிக்க முயற்சிசெய்து, பெண்ணை சவுக் கங்காட்டுக்கு இழுத்துக் கொண்டு செல்ல முற்பட்டபோது படையினருக்கும் பெண்ணுக்கும் இடையே இழுபறிநிலை ஏற்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு; பிரதான கட்சிகள் இரண்டும் முடிவு!

### சிக்கப்பூரில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்பதை, இரு பிரதான அரசியற் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று சிங்கப்பூரில் தெரிவித்தார்.

கிழக்காசிய பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி, நேற்று அந்த நாட்டின் ஜனாதிபதி எஸ்.ஆர். நாதன், பிரதமர் கோஹோக் டொங் ஆகியோரைச் சந்தித்து பேசியபோதே, இவ்வாறு தெரிவித்தார்.

இவர்கள் இருவரையும் தனித் தனியாகச் சந்தித்து தற்போதைய நிலைமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா விரிவாக விளக்கியுள்ளார்.

இன்று நடைபெறும் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

திருகோணமலை - குரங்குபாஞ்சான் பகுதிக்கு

## சிஹல உறுமய சென்றால் இனக்கலவரம் ஏற்படலாம்!

### பாதுகாப்பு அமைச்சர் அனுமதி மறுப்பு

(கொழும்பு)

**குரங்குபாஞ்சான் முகாம் பகுதிக்கு சிஹல உறுமய பாதயாத்திரையை மேற்கொண்டால், பதற்றநிலை ஏற்படுவதோடு அது இனக்கலவரத்திற்கும் வழிவகுக்கலாம். எனவே அந்தப் பகுதிக்கான பாதயாத்திரையை தவிர்த்துக் கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சிஹல உறுமய கட்சிக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

மேலும், சூரன்கல் முகாமுக்கு அப்பால் பாத யாத்திரை செல்வதற்கு அனுமதி வழங்கமுடியாதென, பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததாக, அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ணவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் பகுதிக்கு, சிஹல உறுமய கட்சியின் உறுப்பினர்கள் செல்லவிருப்பதாக, அந்தக் கட்சி - பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கே, பாதுகாப்பு அமைச்சு இந்தப் பதில் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மடத்தடி விபத்துக்கு காரணமான இராணுவச் சாரதிக்குப் பிணை!

மடத்தடி விபத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ வாகன சாரதிக்கு, நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

மடத்தடி விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகள், நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றன. இதன்போது - உயிரிழந்த இளைஞர்கள் சார்பில், சட்டத்தரணி ந.ரவிராஜ் ஆஜரானார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆஜரானார். சட்டத்தரணி சிவலிங்கம் நீதிமன்றில் சமர்ப்பித்த மனு மீதான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக வீதி விபத்தொன்றில் ஈழத்தமிழர்கள் ஐவர் பலி!

(சென்னை)

தமிழகம் திருச்சியருகே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து ஈழத் தமிழர்கள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ஏழு பேர் கொண்ட இந்தக் குடும்பம், கடந்த எட்டு வருடங்களாக மேற்கு சைதாப்பேட்டையில் வசித்து வருகிறது.

இவர்கள் சென்ற வான் திருச்சிக்கு அருகே விபத்துக்குள்ளானதில் - இந்திராணி (வயது 55), இவரது மகள் (வயது 24), மகன் முரளி (வயது 18), மருமகன் கதிரவன் (வயது 25) பேர்த்தி குஷிகா (வயது 04) மற்றும் வானின் சாரதி ஆகியோர் உயிரிழந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கபூர்வமான திட்டவரைபை புலிகள் இயக்கம் முன்வைக்கும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை - முதலாவது தடவையாக விடுதலைப் புலிகள் ஆக்கபூர்வமான வரைபுகளைக் கொண்ட அடிப்படையில் முன்வைக்க இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இறுதித்தீர்மானம் ஒன்றுக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான விபரமான பிரேரணையை முதற்தடவையாக விடுதலைப் புலிகள் சமர்ப்பிப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பிற்கான பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மற்றும் கனேடிய

## வெளியுறவு அமைச்சர்கள் இன்று கொழும்பு வருகை!

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா இரண்டு நாள் விஜயமாகவும், கனேடிய வெளியுறவு அமைச்சர் பெல் கிரஹம் மூன்று நாள் விஜயமாகவும் இன்று கொழும்பு வருகின்றனர்.

இவர்கள் இருவரும் -கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் உட்பட பல்வேறு அரசியற் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இதேவேளை, கனேடிய வெளியுறவு அமைச்சர் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்ட

## ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் பரணிதரன் தலைமறைவு!

ஈ.பி.டிபி இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் பரணீதரன் பிரதீபன் தனது மனைவியுடன் தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நீதிமன்றத்தால் இவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் இவரைத்தேடி வருவதாக மட்டக்களப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சூரியராச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக்காலம் நீடிக்கப்படவில்லை!

### ஜனாதிபதியின் முடிவை ஹரீம் பீரிஸ் அறிவிப்பு

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை நீடிப்பதில்லை என, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுப் பிற்பகல் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே, பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலத்தை நீடிப்பதில்லை என்ற ஜனாதிபதியின் முடிவை அறிவித்தார்.

புதிய பொலிஸ் மா அதிபர் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதி வாய்ந்த நான்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் பெயர்கள் பட்டியலில் உள்ளன. இவர்களில் சிரேஷ்ட தகைமை காரணமாக, பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா டி சில்வாவின் பெயர் முன்னிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1620)

# பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து மிருகத்தனமான வெறியாட்டத்தை காட்டியுள்ளனர்

## உயர் தொழில்நுட்ப மாணவர்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதி வழியாக நாவற்குழி நோக்கி சென்றுகொண்டிருந்த- ஓட்டோவை எதிரே வந்த பவல் கவச வாகனம் தனது பாதையை விட்டு விலகி திடீரென மோதியது. இதன் பின்னணியில் சட்டத்தினையும், ஒழுங்கினையும் பேணவேண்டிய பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து தமது மிருகத்தனமான வெறியாட்டத்தைக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு அரியாலை - மாம்பழம் சந்திப்பகுதியில் இராணுவ பவல்- ஓட்டோ மீது மோதியமை தொடர்பாக, உயர்தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரியாலை - மாம்பழம் சந்தியில் ராணுவ வாகனமும், ஓட்டோவும் விபத்துக்குள்ளான சம்பவத்தின் போது, எமது நிறுவன ஊழியர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி- பொதுமக்கள் மீதும், பத்திரிகையாளர் மீதும் இராணுவம் தன் அடாவடித்தனத்தை காட்டியுள்ளது. ஆயுததாரிகளின் இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த சனிக்கிழமை ஐந்து மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதி வழியாக நாவற்குழி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோவை, எதிரே வந்த பவல் கவச வாகனம் தனது பாதையை விட்டு விலகி திடீரென்று மோதியது. இதன் பின்னணியில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணவேண்டிய பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து தமது மிருகத்தனமான வெறியாட்டத்தினைக் காட்டியுள்ளனர். தொடர்ந்து இடம்பெறுகின்ற இவ்வாறான அடாவடித்தனமானது, தற்போதைய சமாதானச் சூழ்நிலையையும், சமாதானத்தையும் விரும்பாத சில தீய சக்திகளின் திட்டமிட்ட சதிச்செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இராணுவ வாகனத்துடன் தொடர்ச்சியாக இடம்பெறும் இவ்வாறான விபத்துக்களினால், ஆத்திரமடைந்த நிலையில் காணப்படும் பொதுமக்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தின் மூலம் ஆத்திரக்கொதிப்பில் இராணுவத்தினருக்கு எதிராக தமது எதிர்ப்பைக் காட்டினர். இதனை விளங்கிக்கொள் ளாத இராணுவம்- பொதுமக்கள் மீது பொல்லுகளாலும், கற்களினாலும் துரத்தித் துரத்தித் தாக்கியுள்ளனர்.

இராணுவத்தினருடன் சோந்த பொலிஸாரும் .கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசித் தாக்கியுள்ளனர். சம்பவ இடத்திற்கு எதிரேயுள்ள எமது நிறுவன ஊழியர் ஒருவரின் விட்டினுள் உட்புகுந்து அவரைத் தடிகளாலும், பொல்லுகளாலும் பலமாகத் தாக்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த அடாவடித் தனத்தை நாம் மீண்டும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற எமது உள்ளூர் செய்தியாளர்கள், செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் - தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியும், அவர்கள் மிகமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் இந்த அடாவடித்தனம் கண்காணிப்புக்குழுவினரின் வாகனத்தையும் அடித்து நொருக்கும் அளவுக்கு தொடர்ந்திருக்கிறது. இந்த நடவடிக்கை தொடர்பாக, கண்காணிப்புக் குழு பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

எனவே, இராணுவத்தினரின் இவ்வாறான தொடர்ச்சியான விபத்துக்களினால், வீதியால் செல்லும் மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வு ஏற்படுகின்றது. வேண்டுமென்று இடம்பெறும் இவ்வாறான விபத்துக்களை உடன் நிறுத்த அரசதரப்பு, கண்காணிப்புக்குழுவும் ஆவணசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1619)



நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த

தூள்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

(சி-1618)

Tuhedo


### குளவி கொட்டி குடும்பஸ்தர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதியில், கடநத சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில், விறகு ஏற்றுவதற்குச் சென்ற காணிச் சொந்தக்காரருக்கு குளவி கொட்டியதால், சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் - கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னததம்பி சிவராஜா (வயது 41) என்பவர் தலையில் குளவி கொட்டியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (25)

# நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தயக்கம்

யாழ்.குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் அகதிகளில் பெருமளவானோர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தயக்கம் காட்டிவருகின்றனர்.

அண்மைக்கால - யுத்தங்களினால் யாழ்.குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த பெருமளவிலான மக்களில், இரண்டாயிரம் குடும்பங்கள் வவுனியா - நலன்புரி நிலையங்களில் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

மீண்டும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப எண்ணுகிறார்களா என அண்மையில் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட்டது, இந்தக் கருத்துக் கணிப்பில் 60 வீதமானோர் விரும்பவில்லையெனவும், 40 சதவீதமானோரே மீளக்குடியேற விரும்புவதாகவும் தெரிவிகப்பட்டது.

# நீர்விநியோக ஊழியர்கள் மறியற்போராட்டம்

நீர்விநியோக வடிகால் அமைப்புச் சபையில் பணிபுரியும் ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று காலை 9.30 மணிக்கும் - மாலை 3.30 மணிக்கும் இடையில் தமது வேலைகள் யாவற்றையும் நிறுத்திப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பள உயர்வு மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்தே, இப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக கூறப்படுகிறது.

இன்றைய தினம் - நீர்விநியோக வடிகால் அமைப்பின் அனைத்துப் பிரிவுகளும் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)


மாபெரும் இசைநிகழ்வும் உலக சாதனை முயற்சியும்

வறிய மாணவர் கல்வி வளர்ச்சி நிதிக்காக பிரபல பாடகர் என். ரகுநாதன் அடங்கலாக வவுனியா, ராக ஸ்வரங்கள், யாழ். ஐங்கரன் இசைக்குழுவினரின் இசைநிகழ்வும், சி. சுதாகரனின் மயிர்கூச்செறியும் சாகச நிகழ்வும்

இடம்:- யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்
காலம்:- 18,19,10.2003 சனி, ஞாயிறு
நேரம்:- மாலை 4.00 மணி

சுதாகரனின் சாகச நிகழ்வுகள் சில

- தலைமுடியால் லொறி இழுத்தல்.
- காதினால் பாரம் தூக்குதல்.
- நாக்கினால் ஓட்டோ இழுத்தல்.
- ஓடும் இரண்டு காரை இழுத்து நிறுத்துதல்.
- கழுத்தில் தூக்குப்போட்டுத் தொங்குதல்.

இன்னும் பல மயிர்கூச்செறியும் நிகழ்வுகள் அனைவரும் கண்டுகளியுங்கள்.

ஊடக அனுசரணை நமது ஈழநாடு தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

அதிரடித் தள்ளுபடி

5% - 25% விசேட விற்பனைகள்

- விலைக் கழிவுகள், சலுகைகள்
- ஒன்றை வாங்கி மற்றையதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
- எங்கும் இல்லாத குறைந்த விலையில் தரமான பொருட்கள் ஒரே கூரையின்கீழ் பெற்றிட .......

விரையுங்கள்! விரையுங்கள்!

இன்றே .........

தினசரி, பண்டிகைத் தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்

1 வது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டது

- மளிகைப் பொருட்கள்.
- வெளிநாட்டுப் பழவகைகள்.
- ஐஸ்கிறீம் வகைகள்.
- மருந்து, பால்மா வகைகள்.
- தங்கநகை ஆபரணங்கள்.
- சிகை அலங்காரப் பொருட்கள்.
- வாசனைப் பொருட்கள் (சென்ற்).
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்.
- அன்பளிப்புப் பொருட்கள்
- கவரிங், அழகுசாதனப் பொருட்கள்.
- இலத்திரனியல் பொருட்கள்.
- இன்னும் பல பல..............



ஒரு தடவை விஜயம் செய்து பாருங்கள் மீண்டும், மீண்டும் வரத்தூண்டும் .......

அன்னை நாகா புட் சிற்றி

Annai Nagaa Food City

175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

Tel : 021 - 222 5515
Fax : 021 - 222 5223

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம்
# முழவுற்ற நிலையில் சர்ச்சை தொடர்கிறது

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலம் - நேற்றுடன் முடிவடைந்த நிலையில், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அவரின் பதவி நீடிப்பு தொடர்பான தகவல்கள் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படவில்லை. எனத் தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது பொலிஸ்மா அதிபர் பதவியில் உள்ள ஆனந்தராஜா விற்கு நேற்றுடன் அறுபது வயது பூர்த்தியாகின்றது. இதனால் நேற்றுடன் அவரின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பதவியை நீடிக்கக்கோரி, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா முன்வைத்த பிரேரணை தொடர்பாக, இதுவரை ஜனாதிபதி பதில் அளிக்கவில்லை.

ஜனாதிபதியின் பதில் கிடைக்காவிட்டால், பொலிஸ்மா அதிபராகப் புதியவர் ஒருவரே நியமிக்கப் படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு, நான்கு உயர் அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நான்கு பேரில் ஒருவரே - புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படலாம் என ஊகிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் - இது தெடர்பாக கருத்துக் கூறுகையில், பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவி நீடிப்புத் தொடர்பாக ஜனாதிபதி இதுவரை எந்தமுடிவும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (01)

# டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பதாக அறிவிப்பு

(கொழும்பு)

டெங்கு நோயின் தாக்கம், தற்போது அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயினால் பாதிக்கப் பட்டுள்ள மட்டக்களப்பு - காத்தான்குடிப் பிரதேசத்தில் 2 பேரும், மாத்தளைப் பிரதேசத்தில் ஒருவரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கை பூராகவும் - 138 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய்க்கான அறிகுறிகள் என இனங்காண்பதற்கு காய்ச்சல் முதலான குணங்குறிகள் காணப்படின், அத்தகையோர் அரசாங்க வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு, சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வினை மக்கள் பெற்றுக்கொளள வேண்டியது அவசியமானது என்றும, அது தொடர்பாக விழிப்பாக இருக்கும் படியும் - பொதுமக்களைச் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. (01)

# திராய்க்கேணியில் மனிதப்புதைகுழி; எலும்புகள், மண்டையோடுகள் மீட்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க் கிராமமான - திராய்க்கேணியில், பொதுமக்களால் மனித மண்டையோடுகள், எலும்புத்துண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழ்க் கிராமமான - திராய்க் கேணியில், நேற்றுமுன்தினம் பொதுமக்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்ட போது ஒரு இந்து ஆலயத்திற்கு முன்பாக உள்ள பற்றைக்குள் எலும்புத் துண்டுகள் தெரிவதைக் கண்டனர். இதனையடுத்து, அந்த இடத்தில் பொதுமக்கள் தோண்டத் தொடங்கியபோது - எலும்புகள், மண்டையோடுகள், உருக்குலைந்த ஆடைகள் என்பவற்றை மீட்டனர்.

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி , இராணுவம் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் 48 பொதுமக்கள் பிடித்துச் செல்லப்பட்டு - படுகொலை செய்யப்பட்டதாகவும், அவர்களுடைய எலும்பு, மண்டையோடுகளே இவை என, சிரமதானப் பணியில் ஈடுபட்ட பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, படுகொலை செய்யப்பட்ட 48 பொது மக்களின் உறவினர்கள், அந்த இடத்திற்கு வந்து, மண்டையோடுகளைத் தூக்கி கையில் வைத்துக்கொண்டு அழுதவண்ணம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம், சத்துருக்கொண்டான், மகிழடித்தீவு, புல்லுமலை, வீரமுனை உட்படப் பல இடங்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள்- படையினர், ஊர்காவல் படையினர்களால் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் புதைகுழிகள் இன்றும் மர்மமாகவே உள்ளது.

இந்நிலையில், திராய்க்கேணியில் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, ஏனைய பகுதிகளிலுள்ள குழிகளும் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென, பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.





அம்பாறை திராய்க் கேணியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றின் முன்னாலிருந்த மனிதப் புதைகுழியை முதலாவது படத்திலும், தோண்டப்பட்ட எலும்பு மற்றும் மண்டையோடுகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# முஸ்லிம்களின் விவசாயத்துக்கு அம்பாறையில் புலிகள் அனுமதி!

அக்கரைப்பற்று, வட்டமடு கொக்கிலுவ, முரான்வெட்டி ஆகிய பகுதிகளிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் நாளை முதல் விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட தினங்களுக்கு முன்பாக அப்பகுதியில் வாழும் முஸ்லிம் விவசாயிகள், தமது காணி அனுமதிப் பத்திரங்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் உறுதிப்படுத்தி, திருக்கோயில் பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் அரச அதிபர் ஹேரத் தலைமையில், மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவாவும், முஸ்லிம்கள் தரப்பில் யு.எல். உவைஸ் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழுவினரும் கலந்துகொணடனர்.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி இம்மாத இறுதியில் வருவார்

ஐக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய தலைவராகக் கணிக்கப்படும் வெளிவிவகார கமிசனர் கிறிஸ் பற்றன் இந்த மாத இறுதியில் இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக ஐரோப்பிய செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல அமைச்சர்களையும் சந்தித்து நாட்டின் தற்போதைய அமைதிப் பேச்சுவார்த்தை உட்பட, பல விடயங்கள் குறித்தும் ஆராயவுள்ள கமிசனர், பின்னர் யாழ்.சென்று, தற்போதைய நிலைமைகள் குறித்தும், ஐரோப்பிய யூனியன் மேற்கொள்ளும் புனரமைப்புத் திட்டப்பணிகள் குறித்தும் ஆராயவுள்ளதோடு, பல தரப்பட்ட பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதக் கொள்வனவில் புலிகள் அக்கறை நாமும் ஆயுதங்களைத் தயார்படுத்துகிறோம்

## இராணுவத் தளபதி பலகல்ல

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையே நிரந்தர யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற போதிலும் புலிகள் பயங்கர நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை செலுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, நாமும் இந்தப் பயங்கர ஆயுதங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் எம்மைத் தயார்படுத்தி வருகிறோம் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பலகல்ல தெரிவித்தார். நேற்றுமுன்தினம் காலை இலங்கை இராணுவத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழா வைபவத்தில் கலந்து கொண்ட இராணுவ தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல தேநீர் இடைவேளையின்போது பத்திரி கையாளர் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் - 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே தமிழீழ விடுதலைப் புலிகள் விமானங்களை தாக்கக்கூடிய குறுந்தூர ஏவுகணைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதுமாத்திரமன்றிப் புலிகள் வசம் பயங்கர நவீனரக ஏவுகணை, ஆயுதங்கள் என்பன இருப்பதாகவும் தெரியவருகின்றது. தற்பொழுது நாமும் எமது இராணுவத்தை பலப்படுத்தி வருகின்றோம்.

எந்த வகையான தாக்குதலுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் எமது படையை தயார் நிலையில் வைத்துள்ளோம்.

இதேவேளை, படையினருக்கு யுத்த கவச உடைகள் பற்றாக்குறையாக உள்ளது. இவற்றைக் கடன் அடிப்படையில் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றவேளை இந்திய பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

மேலும், இந்த யுத்த கவச உடைகள் இந்தியாவில் உள்ளூர் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாக இருக்கவேண்டும் என்றும் நாம் கோரியுள்ளோம். நாட்டில் மீண்டும் யுத்தசூழ்நிலை உருவாகாத பட்சத்தில் எமதுப்படையில் உள்ளவர்களை சர்வதேச சமாதானப்படைக்கு அனுப்பி வைக்கவுள்ளோம். அதேபோன்று இராணுவ உயர் அதிகாரிகள் கண்காணிப்புக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இராணுவத்திலிருந்து தப்பியோடி தலைமறைவாகியுள்ளவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து இப்பணி மீண்டும் ஆரம்பமாகும்.

இதேவேளை இராணுவத்தில் இருந்து கடந்த 6 வருட காலத்தில் 20 ஆயிரம் பேர் தப்பியோடி தலைமறைவாகியுள்ளதாக தெரிய வருகின்றது. மேலும் படைப் பிரிவுகளில் கடமையாற்றும் சகல பிரிவினர்களும் சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது என்றும் இராணுவ தளபதி குறிப்பிட்டார். (ய)

# உலர் உணவு முத்திரைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட உலர் நிவாரணம் பெறுவோருக்கான 2003 ஆம் ஆண்டு - ஆவணி, தொடக்கம், மார்கழி வரைக்குமான உலர் உணவு முத்திரைகள, தற்போது கிராம அலுவலர் பிரிவுரீதியாக விநியோகப் பட்டு வருகின்றது.

2003 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்கான உலர் உணவு பொருட்கள், அடுத்த வாரமளவில் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கக் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# ஆளுநர் விருதுபெறும் எட்டு அறிஞர்கள்

எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மாகாணத் தமிழ் இலக்கிய மாநாட்டில், எட்டு அறிஞர்கள் வடக்கு - கிழக்கு ஆளுநர் விருது பெறுகிறார்கள்.

தங்கம்மா அப்பாக்குட்டி, ஏ.ஜே.கனகரத்ன, சி.கணபதிப்பிள்ளை, ராஜி மாஸ்டர், கவிஞர் சண்முகம், சிவலிங்கம், மு. பொன்னம்பலம், பாவன் காரியப்பன், ஆகியோரே விருதுபெறத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# சிறைக்கைதி மரணம்

கைதுசெய்யப்பட்டு - தடுத்து வைக்கப்பட்ட கைதி ஒருவர், பொரளைப் பொலிஸ் நிலையத்தில் மரணமடைந்துள்ளார்.

சட்ட விரோதமாக மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காகவே, இவர் - நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார்.

48 வயதான நபரே உயிரிழந்தவர் ஆவார். இவரது மரணத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை.

## தமிழ் மக்களின்

# இருபது வருட போராட்டத்திலிருந்து முஸ்லிம்கள் நிறையக் கற்கவேண்டும்!

## பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத்

(கொழும்பு)

சகோதர தமிழ் மக்களின் இருபது வருட போராட்ட வரலாற்றில் இருந்தும், அவர்களது அரசியலில் இருந்தும், முஸ்லிம்கள் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக யுத்தத்துக்குப் பழக்கப்பட்டிருந்த தமிழர் சமுதாயம், ஒன்றரை வருட கால அமைதியையும், சர்வதேச கண்காணிப்பு நிகழ்ந்த காலப்பகுதியில், இராஜதந்திர ரீதியில், பெரும் சாதனைகளைப் படைத்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

காத்தான்குடி அல்அமீன் வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் சர்வதேச சமூகத்தின் இராஜதந்திரப் பார்வை அழகாகப் பதிந்துள்ள இன்றைய சூழ்நிலையில், முஸ்லிம் அரசியல் வாதிகள் தமது சொந்த, தனிப்பட்ட நலன்களுக்காக, முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் சாசனத்தையே அழிக்க முயற்சி செய்வதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நிறுவன மயப்படுத்தப்பட்ட அரசியல் திட்டங்களை முன்னெடுப்பதில முஸ்லிம்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

# போர்க் காலத்தில் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த இளைஞர்கள்

# இன்று தவறான வழியில் செல்வதைத் தடுக்கவேண்டும்

## வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி

போர்ச்சூழலில் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்த இளைஞர் சமூகம், இன்று நிலைதடுமாறித் தவறான வழியில் செல்வதைத் தடுத்து நிறுத்தச் சமூகம் முன்வரவேண்டும். இளைஞர்களின் இந்தநிலைக்குப் பெற்றோரே காரணமானவர்கள். இதனைத் தடுத்து நிறுத்துவதற்காகவே, இன்று சிறுவர்களிற்கு மனித மேம்பாட்டுக் கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம் எனத் தெரிவித்தார் - சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இளைஞர் பிரிவு இணைப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி. யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தால் நவம்பர் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ள போக்குவரத்துப் பாதுகாப்பு விழிப்புணர்ச்சி வாரம் சம்பந்தமான பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் சம்பந்தமாகப் பொது மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில்.

"ஒரு நிமிடம் சிந்தித்து
சில நிமிடம் நின்றால்
பல்லாண்டு மகிழ்ச்சியாக வாழலாம்", "பாதுகாப்பு எமது கரங்களில" என்ற தொனிப்பொருளில், இநதவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இக்காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இளம் சமூகத்தினர், சாரதிகள், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள், பிரசுர வெளியீடுகள், படக்காட்சிகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் வட-பிராந்திய சாயி நிறுவன இணைப்புக்குழுத் தலைவர் சட்டத்தரணி ஆர்.வசந்தசேனன், ஆலோசகர் செ.சிவஞானம், சேவை இணைப்பாளர் சி.ஈஸ்வரலிங்கம் மற்றும் நிர்வாகத்தினர் கலந்துகொண்டனர். (111)

# லெப்.கேணல் விக்ரரின் நினைவாக மன்னாரில் உதைபந்தாட்டப் போட்டி

லெப். கேணல் விக்டரின் 17 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு, தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டிகள், நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பொதுச் சுடரினைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும், தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி லக்ஸ்மனும் ஏற்றி வைக்க, லெப்.கேணல் விக்டருக்கான ஈகச் சுடரினை, அவரது தந்தை மருசலின் ஏற்றிவைத்தார்.

விக்டரின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை மன்னார் மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் மூர்த்தியும், மங்கள விளக்கை மன்னார் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவரசியும் ஏற்றிவைத்தனர்.

சிறப்புரையை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மூர்த்தி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மன்னார் மாவட்ட கடற் புலிகளின் தளபதி லக்ஸ்மன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த இறுதிச் சுற்றுப்போட்டிகளில் பணங்கட்டிக்கொட்டைச் சேர்ந்த புனித சூசையப்பர் கழகமும், பள்ளிமுனையைச் சேர்ந்த லூசியப்பர் விளையாட்டுக் கழகமும் மோதியதில், 2:0 என்ற கோல் கணக்கில், புனித சூசையப்பர் கழகம் வெற்றியீட்டியது. இதற்கான வெற்றிக் கேடயத்தை - மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்றல் மாறன் வழங்கினார். நன்றியுரையை மன்னார் மாவட்ட மீனவர் சங்க முகாமையாளர் சங்கர் வழங்கினார். (201)

## வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அதிகரிக்கப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும் நேரத்தில், ஓய்வூதியர்களையும் மறக்கவில்லை என்றும் அமைச்சர் அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தபோதும், எதிர்க்கட்சிகள் நாடுமுழுவதும் இது பற்றித் தேவையற்ற பிரசாரங்களை மேற்கொள்கின்றனர் எனவும் அமைச்சர் அபேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## 20 இலட்சம் செலவில் வசந்த மண்டபக்கட்டடம்

துன்னாலை சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம், 20 இலட்சம் ரூபா செலவில் வசந்த மண்டப மாடிக்கட்டடத்தைக கட்டவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளைச் சிக்கன கடனுதவிச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

சங்கத்தலைவி பண்டிதை பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் - தனது சொந்தச் செலவில் கட்டடத்திற்கான காணியை வாங்கிக் கொடுத்துள்ளார்.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா, மிகவிரைவில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# தொலைபேசி சேவை சீர்குலைவால் கல்லூரி ஆசிரிய மாணவர் அவதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரி ஆசிரியமாணவர்களின் உபயோகத்திற்கென, ரெலிக்கொம் நிறுவனத்தினரால் பொருத்தப்பட்ட காட் தொலைபேசிச்சேவை சீர குலைந்துள்ளமையால்,ஆசிரியர் பயிலுநர்கள் அல்லல் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பயிலுநர்கள் விடுதியில் தங்கியிருந்தே கல்வி கற்று வருகின்றார்கள். வெளிமாவட்ட பயிலுநர்கள் - பெற்றோருடன் தொடர்புகொள்வதற்கென அமைக்கப்பட்ட இந்தத் தொலைபேசி சேவை சீர்குலைந்துள்ளமையால் பயிலுநர்கள் - பெற்றோருடன் தொடர்புகொள்ளமுடியாது அவதிப்படுகிறார்கள்.

கடந்த மாதம் இந்தத் தொலைபேசி கூடியளவு பணத்தினை வெட்டுவதாக மாணவர்கள் ரெலிக்கொம் நிறுவனத்தில் புகார்செய்து, சீர்செய்யப்பட்டது. இதன் பின் இந்த மாதம் சேவை சீர்குலைந்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் இவ்வாறு சீர்குலையும் இந்தத் தொலைபேசிச் சேவையை, திறம்பட திருத்தியமைத்து, பயன்பாட்டிற்கு வழங்கவேண்டும் என்று மாணவர்கள் கவலையுடன் தெரிவிக்கிறார்கள்.

மேலும், கல்வியியற் கல்லூரி அமைந்துள்ள சூழலில் தொலைபேசிச் சேவை நிலையங்கள் இல்லாமையும் குறிப்பிடத்தக்கது. (83)

# சீரற்ற காலநிலையால் படகு சேவை பாதிப்பு

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்துச் சேவை, கடந்த 5 நாட்களாகக் காலநிலை சீரின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் வழமைக்கு மாறாக இந்தக் காலப்பகுதியில் கடும் காற்று வீசுவதுடன், கடலும் கொந்தளிப்பாக வுள்ளது. நெடுந்தீவு, மாவிலித்துறை முகப்பகுதி- இந்தக் காற்றுக் காரணமாகக் காலைவேளைகளில் நீர்வற்றிக் காணப்படுவதனால், காலை நேரக் குமுதினிப் படகுச்சேவை கடந்த சில நாட்களாக இடம்பெறவில்லை.

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கப் படகே தற்போது காலை நேரச் சேவையில் ஈடுபடுகின்றது. இதன் காரணமாகப் பிரயாணிகளும், அவர்களது உடமைகளும் - கடலுடன் படகு முட்டிமோதுப்படும் போது, அள்ளி வீசப்படும் நீரில் நனைவதனால், பெரும் அசெளகரியங்களை எதிர்கொள்கிறார்கள். இதேவேளை, குமுதினிப் படகில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியநிலையிலும் தற்போது சேவையிலீடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. (113)

## உதைபந்தாட்ட போட்டியில் சென். பற்றிக்ஸ் வெற்றி

யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கும் இடையில் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப போட்டிகளில், சகல பிரிவுகளிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

14 வயதுப் பிரிவுப் போட்டியில் 3:0 என்றநிலையிலும், 16 வயதுப் பிரிவுப் போட்டியில் 3:0 என்றநிலையிலும், 18 வயதுப் பிரிவுப் போட்டியில் 2:0 என்றநிலையிலும், 20 வயதுப் பிரிவுப் போட்டியில் 5:0 என்றநிலையிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டது. (58)

## முதியோர் தினம் கொண்டாடப்பட்டது

வலி. தெற்கு பிரதேச செயலகத்தில் முதியோர்தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

இதில் இந்தப் பிரதேசத்திலுள்ள முப்பது கிராமசேவையாளர் பிரிவிலிருந்தும் - பிரிவுரீதியாக 60 வயதிற்குமேற்பட்ட ஒரு முதியோர் என, மொத்தம் 30 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு உடுப்புப் பொதிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்தக் கொண்டாட்டங்கள், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் எஸ் ஆர். ஜெய்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது. (101)



துன்னாலை வசந்தன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியை, விடுதலைப் புலிகளின் வடமராட்சி மகளிர அரசியல்துறைப் பொறுப்பாளர் வர்ணா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம் (17)

# கரவெட்டி பிரதேச செயலக சிறுவர்-முதியோர் தினவிழா

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலக சிறுவர் - முதியோர் தினவிழா எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி மயிலேறும்பெருமாள் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக ஊற்று நிறுவனத்தைச் சேர்ந்த பொ.விக்கினேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வலயமட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கலும், முதியோர் கௌரவிப்பும் இந்த நிகழ்வில் இடம்பெறவுள்ளதாகவும் - கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம் தெரிவித்தார். (116)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம. கஜமுகன்
முகவரி : உடையார் வீடு, கரவெட்டி.

முதலாவது அகவையில்

பெயர் : பி.ஜனனி
முகவரி : 19, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி.



முதலாவது அகவையில்



பெயர் : ர.ஜனனன்
முகவரி : 114/1, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம்.

ஏழாவது அகவையில்

பெயர் : ப.தனுஷன்
முகவரி : கடைவைப்புலம் வீதி, சுன்னாகம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# "லான் செட்" சஞ்சிகையில் மருத்துவப் பணி

இன்று மருத்துவத்துறை தொடர்பான சஞ்சிகைகள் அதிகளவில் பிரசுரிக்கப்படுகின்றன. ஆனால் 'லான்



செட்"என்ற சஞ்சிகை மிகவும் மதிப்புமிக்க சஞ்சிகையாக உலகம் முழுவதிலும் கணிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக வைத்தியத்துறைகளில் ஏற்படும் கண்டுபிடிப்புக்கள், இந்தச் சஞ்சிகையில் பிரசுரமாகும்.

இந்தச் சஞ்சிகை 180 ஆண்டுகள் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இதை ஸ்தாபித்தவர் வைத்தியரும், மரணவிசாரணை அதிகாரியும் நாடாளுமன்ற அங்கத்தவருமான "தோமஷ் வாக்லே" ஆவார்.


அந்தக் காலத்தில் வைத்திய தொழிலில் காணப்பட்ட பல குளறுபடிகளை "லான்செட்" சஞ்சிகை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தக்காலத்தில், ஆஸ்க்லேய் கூப்பர்" என்பவர் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு சத்திரசிகிச்சை நிபுணர். இவரது மகனும் சிறந்த வைத்திய நிபுணராகவே கடமைபுரிந்தார். இவரது சிறிய சத்திரசிகிச்சையொன்று தோல்வியுற்றதால், நோயாளி மரணமடைந்துவிட்டார். "லான்செட்" சஞ்சிகை பலமான போராட்டம் நடத்தி, உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு உதவிபுரிந்தது. போர்க்காலத்தில் நோயாளிகளுக்கு நவீன சுகாதார முறைகளைப் "புளோரன்ஸ் நைட்டிங்கேல்" அறிமுகப்படுத்தியதை வெளிப்படுத்தியும், அதேநேரத்தில் மற்ற வைத்தியசாலைகள் எவ்வாறு சுத்தமானமுறையில் காணப்பட்டன என்பதையும், இச்சஞ்சிகை தெளிவுபடுத்தி இருந்தது. ஒரு மனிதனின் இரத்தத்தை இன்னுமொரு மனிதனுக்கு செலுத்தும் டொக்டர் "ஜேம்ஸ் புலுன் டேலின்" கண்டுபிடிப்பை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியது "லான்செட்" என்பதும் குறிப்பிடக்கூடியதாகும். 1867 ஆம் ஆண்டு டொக்டர் ஜெசெப் லீச்டர் என்னும் வைத்தியர் திறந்த வெட்டுக்காயங்களூடாக உடலில் பரவும் நோய்க் கிருமிக்கெதிரான "அண்டி செப்ரிக்" மருந்தின் கண்டுபிடிப்பை இச்சஞ்சகையூடாகத் தெரிவித்திருந்தார்.



இன்று இயற்கையானமுறையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்குச் செய்யும் அறுவைச்சிகிச்சை முறையான "செசரியன்"எனப்படும் அறுவைச்சிகிச்சைக்கு மயக்கமருந்தை பாவித்துசெய்யும் முறையும் இச்சஞ்சிகையில் அறிமுகமானது. இறுதியாக 20 ஆம் நூற்றாண்டில் பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் உயிர்காக்கும் மருந்தான பென்சிலின் கண்டுபிடிப்பும் இந்த சஞ்சிகையில் தான் பிரசுரமானது.





## மனமே மனமே

மக்களிடையே வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதற்கு உலகளாவிய ரீதியில் பல ஊக்கமுயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. அதிலொரு கட்டமாக ரஷ்ய நாட்டு ஆராய்ச்சியாளர் டெரின் பிறவுண் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். அதில் அவர் எடுத்த வாசிப்பு வகை மனவாசிப்பாகும். இந்த மனவாசிப்புத்திறன் என்பது, ஒரு அதியுன்னதமான திறமை என்பதனை விஞ்ஞானிகள் ஒத்துக்கொள்கின்றார்கள். இவர், ஒருவனுடைய மனவாசிப்புத்திறனைத் துப்பாக்கி சுடுதலுடன் ஒப்பிடுகின்றார்.

ஒவ்வொருவருக்கும் 10 துப்பாக்கி சுடும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. அவர்களுடைய வெற்றிகளை வைத்துக்கொண்டு, அவர்களுடைய மனவாசிப்புத் திறமையை அறியமுடியும். அதேபோல, ஒலியமைப்பினை மனதில் நிறுத்துதல், பல இலக்கங்களை மனதில் வைத்தல் போன்றனவும் மனவாசிப்புத்திறனை ஊக்குவிக்கும்.

ஆனால், நாஸா விண்வெளி ஆய்வுகூடத்தினைச் சேர்ந்த றொபேட் பியர்ஸ் என்ற விஞ்ஞானி, இதனை மறுதலிக்கின்றார். அவர் மனிதர்களுடைய அனுபவங்களே அவர்களுடைய மனவாசிப்புத்திறனை வளர்க்கின்றன என்கின்றார். வாசிப்பு என்பது- உளவியல்ரீதியாக, உளவியலாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாகவும் விளங்குகின்றது. சில மாணவர்கள் மனக்கணிதத்தில் தாங்கள் பின் தங்கியிருப்பதாகக் கவலைப்படுகின்றார்கள்.

மனவாசிப்புத்திறன் என்பது, மனிதனுடைய மூளை மற்றும் புலன்கள் எல்லாவற்றினுடைய ஒரு ஒன்றுசேர்ந்த செயற்பாடு என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

## ஒளித்தொகுப்பு



உலகிலேயே எல்லாவற்றுக்கும் உற்பத்தியாக்கியாக தாவரங்களே காணப்படுகின்றன. தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செய்வது, யாவரும் அறிந்த விடயம். இது ஒரு இரசாயனச் சேர்க்கையாகும். ஆனால், சூரிய ஒளி மூலம் கிடைக்கின்ற இந்த இரசாயன மாற்றத்தில் சில சிக்கல்கள் தோன்றியுள்ளன. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வில்லியம் கிராமர் என்ற பேராசிரியர், இந்தச் சிக்கல்களுக்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். தாவரங்களுடைய கலங்களை எல்லாம் நுணுக்குக்காட்டிமூலம் பார்ப்பது மட்டுமல்ல, அங்கே மிகநுண்ணிய கலங்களில் கருக்களை எக்ஸ் கதிர் மூலம் பார்த்து, அதனுடைய கட்டமைப்புக்களை எல்லாம் அறிந்து, அதனை ஆராய்ச்சி செய்கின்றார்கள். ஒளித்தொகுப்பின் மூலம் உருவாகும் சேர்வைகள் சிக்கலானவை. உண்மையிலேயே, தாவரங்களுடைய முனைகள் - உலர் மின்கலத்தின் இரு முனைகள் போன்றவை. தாவர மின்சக்தியைச் சேமிக்க முடியும் என, பேராசிரியர் ஜானட் சிமித் உறுதிகூறுகிறார்.

தாவரங்கள் மூலம் சோலர் தயாரிப்பில் ஈடுபடமுடியுமா? என்ற ஆராய்ச்சியும் தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

இது வெற்றியடையுமானால், சோலர் தயாரிப்பில் ஒரு புதிய பரிணாமத்தை அடையமுடியுமென சுவிஸ் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால், தாவரங்களில் காணப்படுகின்ற புரோட்டீன்களினுடைய கட்டமைப்பு, இதனைத் தயாரிப்பதில் ஏதேனும் குழப்பத்தை விளைவிக்குமா? என்றாலும், ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி இது வெற்றியளிக்கும் என நம்பப்படுகிறது.


## குருடர்களும் பார்க்கலாம்



குருடர்களால், கண்களால் பார்க்கமுடியாது. ஆனால், காதுகளால் பார்க்கமுடியும். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? பிறவியிலேயே கண்பார்வையில்லாத மைக்கல் தோமஸ் என்ற நெதர்லாந்துப் பெண், காதுகளால் பார்க்கின்றார். அவர் தன்னுடைய வீட்டிலிருக்கின்ற சுவர், கதவு போன்றவற்றினுடைய சத்தங்களை எல்லாம் **CD** இல் பதிந்து, அதனை மீண்டும் மீண்டும் கேட்பதன்மூலம், தன்னுடைய பார்வையைச் சத்தங்கள்மூலம் நெறிப்படுத்தி வைத்திருக்கின்றார். ஒவ்வொரு ஒலியும் இவருக்குக் கேட்கக்கூடியவாறு காதிலே ஒலிவாங்கி பொருத்தப்பட்டிருக்கின்றது. இந்த உபகரணங்கள் கணினிமயப்படுத்தப்பட்டவை. கமரா, ஸ்ரீரியோ ஒலிவாங்கி, **PC** கணினி ஆகியன எல்லாம் சேர்ந்து 2500 அமெரிக்க டொலர்களாகும். இதன்மூலம் பார்க்கமுடியாத பொருட்களை எல்லாம் சத்தங்கள் மூலம், மூளையை உணரச்செய்து, பார்வைப்புலனைக் கொண்டு வரக்கூடியதாக உள்ளது. இந்த முறைமூலம் நிறங்களைக் கூட, குருடர்களால் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இந்த விடயங்கள் எல்லாம் ஒருவகையான கணினி மென்பொருள் மூலமே கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது பல்கேரியா நாட்டில் இந்த உபகரணம் அதிகமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. நொக்கியா 3650 வகையான கமரா கையடக்கத் தொலைபேசிகளின் மூலம், இது வெற்றிகரமாக்கப்பட்டுள்ளது.

## அழிக்கும் சோனர்



கடற்படையினர் மற்றும் ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்களால் பயன்படுத்தப்படுகின்ற சோனர்கருவியால், பெறுமதிவாய்ந்த கடல் உயிரினங்கள் இறக்க நேரிடுகின்றது. இதிலும், கடற்படையினர் பாவிக்கின்ற சோனர்கருவி மிகவும் அதிக தாக்கத்தினை உண்டு பண்ணுவதாக விலங்கியல் நிபுணர்கள் கூறுகின்றார்கள். இதனுடைய ஒளி அமைப்பு விலங்குகளைப் பாதிக்கின்றது.



அண்மையில் தொடர்ச்சியாக இறந்த 14 திமிங்கிலங்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, சோனர்கருவியினுடைய தாக்கம் திமிங்கிலங்களுடைய உடற்கலங்களில் ஒரு வகையான நோயை உருவாக்கின்றன என அறியப்பட்டுள்ளது. மேற்படி திமிங்கிலங்கள் கனாரி தீவுகளில் மட்டுமே இறந்தன. இதற்கான காரணம். அங்கே இடம்பெற்ற கடற்படையினரின் ஒத்திகைதான். இதன் காரணமாக டொல்பின்களும் பெருமளவு இறந்திருக்கின்றன. தற்போது இங்கிலாந்து மற்றும் ஸ்பெயின் விஞ்ஞானிகள் இறந்த விலங்குகளின் - சிறுநீரகம், ஈரல் ஆகியவற்றை எடுத்துவைத்து, இவற்றின் இறப்பிற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதனைத் தடுப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான முயற்சிகளைச் செய்துகொண்டு வருகின்றது. சோனர் ஒலிகள் உருவாக்கும் குமிழிகள் - கடல் உயிரினங்களின் கலங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, அவற்றிற்கு நோயை உருவாக்குகின்றது. இது தடுக்கப்பட்டால் பெறுமதிவாய்ந்த கடல் உயிரினங்கள் பல காப்பாற்றப்படும்.

## ஒளியினால் ஏற்படும் மாசடைதல்

சூழல் பல்வேறு காரணங்களினால் பாதிக்கப்படுகிறது. அதிலும், தற்போதைய கண்டுபிடிப்புகளின்படி சுற்றாடல் மாசடைவதற்கு அளவுகடந்த வெளிச்சமும் ஒருகாரணம் என்று கூறப்படுகிறது. இருளைவிட வெளிச்சத்தை அதிகமாக விரும்புகின்ற மக்களுக்கு, இது ஒரு பேரிடியாகத்தான் இருக்கும். ஆனால் - இரவும், பகலும் ஒரேபோலக்காட்சியளிக்கும் ஐரோப்பிய நகரங்களை எந்த வகைக்குள் சேர்ப்பது. இங்கிலாந்தின் பாராளுமன்ற அங்கத்தவர்கள்முதல் மந்திரிகள்வரை இதற்கு சிவப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஒளியினால் ஏற்படக்கூடிய சூழல்மாசடைதலை உடனடியாகக் கட்டுப்படுத்தச் சொல்லி, அரசுக்கு நெருக்கடி கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். தேவையற்ற ஒளி விளக்குகளை நிறுத்தல், வீதி விளக்குகளின் எண்ணிக்கையை தேவைக்கேற்றவாறு வைத்திருத்தல் போன்ற திட்டங்கள் இங்கிலாந்தின் கிராமப்புற மக்களின் மத்தியில் இருந்து எழுந்துள்ள பிரேரணைகளாக இருக்கின்றன. நகரத்திலிருந்து புறப்படுகின்ற ஒளிவிளக்குகளின் செல்வாக்கு



கிராமங்களின் மீதும் பாய்ந்து, கிராமங்களையும் மாசாக்கிக் கொண்டிருக்கின்றது. கிராமகள் தேவையற்ற ஒளி விளக்குகளை இடைநிறுத்தச் சொல்லி, அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இரவுகளில் வெளிச்சம் நிறுத்தப்படமாட்டாது என அரசாங்கம் கடுமையாக எச்சரித்துள்ளநிலையில், ஒளியின் அளவு குறைக்கப்படும் என வாக்களித்துள்ளது.

# தாவர வங்கி




உலகிலே காணப்படுகின்ற காடுகளெல்லாம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன. அதிலும் பெறுமதி வாய்ந்த மரங்களெல்லாம் அழிந்துகொண்டு வருகின்றன. ஆனால், இவற்றை உடனடியாக அழிவிலிருந்து பாது காக்கவேண்டும் என்பதில், பிரிட்டிஸ் தாவரவியலாளர்கள் உறுதியான நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதிலே சைமன் லினிஸ்டன், கிளாயர் டென்னர், லோயர் சிமித் ஆகிய ஆராய்ச்சி நிபுணர்கள் - மிலேனியம் விதை வங்கி ஒன்றை இங்கிலாந்தின் தென்பகுதியில் தோற்றுவித்திருக்கிறார்கள். இது எதிர்காலத்தில் தாவரங்களின் மீள் உருவாக்கத்திற்குப் பெரிதும் உதவி செய்யும் என்பதில் ஐயமேயில்லை. ஏறக்குறைய 34 ஆயிரம் தாவரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.



ஆனால், இவற்றில் 50 வீதமானவையாவது - 2100 ஆம் ஆண்டளவில் மீள உருவாக்கப்படும் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. ஆனால், இந்த வங்கியில் தாவர விதைகளைச் சேமிப்பதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றில் கால நிலைப் பிரச்சினை மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. இதிலொரு சிறப்பான விடயம் என்னவென்றால்- ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினுடைய அனுசரணை இதற்குக் கிடைத்திருப்பதாகும். பெரும்பாலும் உணவுக்குரிய தாவர வகைகள் அழிந்துபோவது குறைவு. இப்படியான ஒரு வங்கி உலகளாவியரீதியில் ஒரு மைல்கல் எனக் கூறப்படுகிறது. இந்த வங்கியை உருவாக்க, ஏறத்தாழ 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்பட்டது. அதிலும் வங்கியைப் பராமரிக்க - வருடா வருடம் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன. இதன்மூலம், தாவரங்கள் உருவாகுமா?

# திரை விமர்சனம்



## த்ரீரோஸஸ்

மூன்று முன்னணி நடிகைகள் ஹீரோயின்களாக நடித்து, வெளிவந்திருக்கும் படம் இது. ரமபா, ஜோதிகா, லைலா ஆகிய மூவரும் வில்லன்களைப் பறந்து பறந்து அடிக்கின்றார்கள். விரல் உயர்த்தி, சவால் விடுகின்றார்கள். அந்தரத்தில் பறக்கின்றார்கள். உங்களுடைய அடிதடி ஹீரோக்களாகிய சரத்குமார், அர்ஜுன், விஜயகாந் ஆகியோருடைய சண்டைகள் எல்லாம் ப்பூ என்று ஊதித்தள்ளுமளவுக்குச் சண்டைபோடுகின்றார்கள் என்றால் பாருங்களேன். மூவரும் கல்யாணம் வேண்டாம் என்று ஒற்றைக் காலில் நிற்கின்றார்கள். ஏன்? இதனை கடைசிவரை டைரக்டர் சொல்லவேயில்லை திடீரெனக் குவைத்திலிருந்துதலால் ஆஸ்மிதன் காதலனுடன் இந்தியாவுக்கு வருகின்றார். அவனைப் பிரித்து மீண்டும் குவைத்துக்கு கொண்டுசெல்ல, ஒரு பெரிய வேலையே நடக்கின்றது. அதற்குத் துணை மந்திரி ராஜன் பிதேவ். இதனை எல்லாம் சமாளிக்கின்றார்கள். ரம்பா, லைலா, ஜோதிகா முக்கூட்டணியினால், இந்தப் படத்தின் அடிதடிக் காட்சிகளில் சலித்த ரசிகப் பெருமக்களுக்கு, விவேக்கின் காமெடி நல்ல மருந்து. லைலாவுடன் ஆகாஷ் ஒரு ஆட்டம் போடுகிறார். அதேபோல, கோவிந்துடனும் ரம்பா ஆடியுள்ளார் நடனம் ஒன்றும் தொடர்பேயில்லை. கார்த்திக்ராஜாவின் இசை எடுபடவில்லை. சண்டை பயிற்சி கனல் கண்ணன். வசனம் பிரசன்னகுமார். ரோஜாக்கள் - மணக்கவில்லை.

# விண்வெளி ஆய்வில் சீனா

பல அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதநிலையில், சீனா - விண்வெளியில் மற்ற நாடுகளுடன் ஏன் போட்டியிட முயற்சி செய்கிறது? ஐக்கிய நாடுகளில் மனித வளர்ச்சி தொடர்பான கணிப்பீட்டில் - சீனா 96 ஆவது இடத்தில் காணப்படுகிறது. அதிக மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள ஒரு முன்னேறும் நாடாகவே சீனா கருதப்படுகிறது. ஆனால், மனிதனை விண்ணிற்கு அனுப்பும் முயற்சியில் அடுத்தவாரம் ஈடுபடவுள்ளது, இதன்மூலம் விண்வெளிப் பயணங்களில் தன்னைத் தொடர்புபடுத்திக்கொள்ளும் 3 ஆவது நாடாக சீனா உருவாகியுள்ளது.



அண்மைக் காலத்தில் சீனா பொருளாதாரத்திலும், தொழிநுட்பத்திலும் பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் முயற்சியின்மூலம், தனது செல்வாக்கை மேலும் உயர்த்திக் கொள்ள முயற்சிக்கிறது.

சீனாவின் 10 ஆண்டுகால விண்வெளித்திட்டத்தில், செயற்கைக்கோள் ஒன்றின்மூலம் ஒலிபரப்பு, தொலைத்தொடர்புகளை உண்டாக்குவதும், இதன்மூலம் உலகின் இராணுவம், மக்கள் தொடர்பான கணிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதும் அதன் நோக்கமாகும். மனிதனுக்குத் தேவையான சக்தி வளங்களும், மூலவளங்களும் அருகிவரும்நிலையில், சந்திரன் அவற்றை பெறுவதற்கு உதவும் எனவும் சீனா கருதுகின்றது.

# வாரம் ஒரு யோகாசனம்

## புஜ பீடாசனம்

விரிப்பின் மீது கால்களை நீட்டியவாறு அமரவேண்டும். தலை, முதுகு முதலியவற்றை நேராக நிமிர்த்தி உட்காரவேண்டும். கைகள் இரண்டையும் தரையில் அழுத்தமாக ஊன்றி, புட்டப்பகுதியை மேலே தூக்கவேண்டும். கால்கள் இரண்டையும் கைகளின் வெளிப்புறமாக வளைத்து, கணுக்கால்கள் ஒன்றோடு ஒன்றாக இரண்டு பாதங்களையும் பின்னிக்கொள்ளவேண்டும். இப்பொழுது உடல் பாரம் முழுவதும் ஊன்றப்பட்டிருக்கும் இரு கைகளின்மேலே இருக்கும். இந்த நிலையில், இரண்டு நிமிடம் சீரான மூச்சு இழுத்துவிட வேண்டும். பின்னிக்கொண்ட கால்களைவிடுவித்து, வைச்சுராசன நிலையில் இரண்டு நிமிடம் இருக்கவேண்டும்.



### நன்மைகள்


இந்த ஆசனத்தால் தோல்கள், கைகள் அதிகமான வலிமை பெறுகின்றது. மூளைத்திறன் ஆற்றல் அடைகின்றது. இருதயம் பலம்பெறும். தோல் பகுதிக்கு அதிக இரத்தம் போய்ச்சேரும். கழுத்துப் பிடிப்புக் குணமாகும். ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகமான நன்மைகள் உண்டு. வயிறு சம்பந்தமான எந்தப் பிணிகளும் நீங்கும். சுகப்பிரசவம் உண்டாகும், மாதவிடாய் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் இப்பயிற்சிகளை காலை, மாலை செய்யவேண்டும். மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். மலச் சிக்கல் ஏற்படாமல் இருக்கும். சோம்பல் தன்மை நீங்கும், உடல் ஆரோக்கியம் அடையும். பெண்களுக்குப் பால்சுரக்கும். ஆண் - பெண் போகசக்தி அதிகரிக்கும். முகத்தில் வசீகரத் தன்மை உண்டாகும். பெண்கள் கர்ப்பம் தரித்திருந்தால் இவ் ஆசனம் செய்யக்கூடாது.

*தருபவர் - மா.மகாநேசன், கல்லுவம்*

# நோபல் பரிசிற்கு இரு அமெரிக்கர்கள் தெரிவு

உடல் கலங்கள் தொடர்பான ஆய்விற்காக இரு அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

'பீற்றர் ஆக்ரே', றொடெரிக் மக்கினோன் ஆகிய இருவருமே நோபல் பரிசு பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.



பல நோய்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு, இவர்களின் கண்டுபிடிப்பு பேருதவியாக அமைந்துள்ளதென நோபல் அக்கடமி விபரித்துள்ளது. ஒரு கலத்திற்குள்ளும், கலத்திலிருந்தும் எவ்வாறெவ்வாறு திரவங்கள் செல்கின்றது என இவர்கள் ஆராய்ந்து தெரிவித்திருந்தார்கள். புற்றுநோய் மனிதனை தாக்கும்போது, கலங்களில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்து, வெளிப்படுத்தி இருந்தார்கள். உயிர் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்வதற்கு சில கண்டுபிடிப்புகள் அவசியமெனவும், மனிதர்கள் அல்லது உயிர் பரிணாம வளர்ச்சியுள்ள உயிரினங்கள் தொடக்கம் தாவரங்கள், பற்றிரீயா வரை அதன் அடிப்படை அமைப்பை தெரிந்திருக்கவேண்டும் எனவும், 'றோர்டன்' என்ற நோபல் குழுவின் அதிகாரி தெரிவித்தார். 11 ஆம் ஆண்டு ஒரு கலத்திற்குள் நீர் மூலக்கூறு எவ்வாறு செல்கின்றதெனவும், எவ்வாறு கலத்தில் இருந்து வெளியேறுகின்றதெனவும் கண்டுபிடித்தார். இவரது கண்டுபிடிப்பு உயிரியல் இரசாயனம், மரபணு அமைப்பு ஆகியன நீரில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை கண்டுகொள்ள உதவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்களை இவரின் கண்டுபிடிப்பு அறிய உதவியாக இருந்தது. ஒரு கலத்திற்குள் உப்பு நீர் எவ்வாறு செல்கின்றதென்பதைப் பேராசிரியர் மக்கினோன் கண்டுபிடித்துள்ளார்.

# மிருகங்களின் மன அழுத்தம்

உலகில் காடுகளில் உள்ள மாமிச உண்ணிகள் ஒருவகையான மன அழுத்தத்துடன் காணப்படுவதாக, விலங்கினங்களை ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

அதிலும் மிருகக்காட்சிச் சாலையில் காணப்படுகின்ற மாமிச உண்ணிகளின்நிலை இன்னும் கவலைக்கிடம். இதற்குக் காரணம் அவற்றுக்குத் தேவையான மாமிச உணவின் பற்றாக்குறைதான். கரடிகள் மிகவும் சோர்வாகக் காணப்படுகின்றன. அதிகமாமிசம் உண்ணும் இவற்றினால்,- மாமிசப் பற்றாக்குறையைத் தாங்கமுடியாதநிலை - இவற்றிற்கு மிகவும் கவலையை அளித்திருக்கின்றது. மாமிச உணவை மட்டுமே நம்பியுள்ள 36 விலங்கினங்கள் உலகிலே காணப்படுகின்றன. இவை விலங்குணவுகள் இல்லாவிட்டால், உயிர்வாழ முடியாதவை.



இதன் காரணமாக இவை வேறு இடங்களுக்கு உணவு தேடிப்போவதனால், மிகவும் களைத்துப்போகின்றன. அதிலும் உணவு கிடைக்காமல் போவதனால், மிகவும் மன உளைச்சலுக்குள்ளாகின்றன. விஞ்ஞானிகளின் கருத்துப்படி ஊனுண்ணி உணவுப் பற்றாக்குறைக்குட்படுமானால், அவற்றினுடைய இனங்களே அழிந்துவிடுவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது. புதிய சூழலில் பழகும் விலங்குகள் - மிருகக்காட்சிச்சாலைச் சூழலை மிகவும் எதிர்பார்ப்புடன் பார்க்கின்றன. அவற்றின் இயற்கைத் தன்மையைக் கொடுக்கமுடியாவிட்டாலும், அவற்றின் உணவையாவது சரியாகக் கொடுக்கலாமல்லவா?.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
*போஒம் அளவும்ஓர் நோய்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# அநுராவின் புலம்பல்கள்

1990 களின் மத்திய பகுதியில், நீண்ட 17 வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைப் புறந்தள்ளிவிட்டு, சிறிலங்கா மக்களின் பெருமளவிலான ஆதரவுடன், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் ஆட்சிப்பீடத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றியபோது, அதற்கு கிடைத்த அபரிமிதமான தேர்தல் வெற்றியானது, சந்திரிகா மீதான மக்களின் பேரபிமானத்தை வெளிக்காட்டியது என்பதைவிடவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரப் போக்குடன் கூடிய மக்களின் நலனில் அக்கறைகொள்ளாத, ஊழலும் போர்வெறியும் கொண்ட ஒன்றரை தசாப்தத்திற்கும் அதிகமான கால இருண்ட ஆட்சியின்மீது, மக்கள் கொண்டிருந்த கடும் வெறுப்பையும் அதிருப்தியையும், கோபத்தையுமே வெளிக்காட்டியது.

எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் பிரதிநிதிகளைக்கொண்டதான நாடாளுமன்றத்தை, அதிகாரவலுவற்ற, சுயமாகத் தீர்மானமெதுவும் எடுக்கும் திறனற்ற ஒன்றாக மாற்றி, சர்வாதிகார வலுவுள்ளவராக ஜனாதிபதி என்ற தனிமனிதரை நிர்ணயம் செய்யும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையானது, 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் அறிமுகம் செய்யப்பட்டது முதல், சிறிலங்காவின் ஜனநாயகம் என்பது கேள்விக்குறியான ஒன்றாக மாறத்தொடங்கியதையடுத்து, மக்கள் ஐ.தே. அரசின் மீது அதிருப்தியும் கோபமும் கொண்டவர்களாகினர்.

தான் பதவியேற்றால் - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கி, பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவேன் என்றும், போரை நிறுத்தி நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வேன் எனவும், மக்களிடையே சந்திரிகா மேற்கொண்ட பிரசாரக் கவர்ச்சியில் மயங்கி, ஐ.தே.க.அரசின் மீதான வெறுப்பு உந்த பொ.ஐ. முன்னணியை ஆட்சிப்பீடம் ஏற்றினர் மக்கள்.

ஆனால், பதவிக் கதிரையில் அமர்ந்ததும், அதன் அதிகார வலுவும, ஆடம்பர சொகுசும், ஜனாதிபதி அந்தஸ்தை விட்டுக் கொடுக்கவோ, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவோ சந்திரிகாவுக்கு இடங்கொடுக்கவில்லை.

பாரம்பரிய பேரினவாதக் கொள்கைகளும், பௌத்த மதவாதக் கோட்பாடுகளும் சந்திரிகாவின் அரசியல் சித்தாந்தத்தில், எவ்வித மாற்றத்தையும் கொண்டுவர அனுமதிக்கவில்லை.

சந்திரிகா மக்களுக்களித்த வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து, ஒரு மூன்றாந்தர சிங்களத் தலைவருக்குரிய இனவாத அம்சங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு ஜனாதிபதியாக, தன்னை நிரந்தரமாக தனக்குரிய காலம் வரை நிலைநிறுத்திக் கொள்வதிலேயே குறியாக இருந்தார்.

பண்டாரநாயக்க காலம் முதல், சிறிமா காலம் எனத் தொடர்ந்து, பின்னர் சந்திரிகா காலமென ஆட்சித் தலைமைகள்தான் மாறியதேயொழிய, ஆட்சிக் கொள்கைகளோ, அரசியல் நெறிமுறைகளோ மாறவே இல்லை.

மாறாக... அவர்களின் அதிகாரக் கெடுபிடிகளும், அரசியல் வழிமுறைகளும் மேலும் மேலும் சர்வாதிகாரத் தன்மைகொண்டதாகவே தீவிர வளர்ச்சி கண்டன...

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிககவேண்டும் எனக்கூறும் சிங்களத் தலைமைகள் அனைவருக்கும், அந்தப் பதவிக் கதிரையில் எப்போதுமே ஒரு அலாதியான பிரியம் இருப்பது தெரிந்த விடயமே.

அடுத்த ஜனாதிபதியாக கதிரையில் அமர, அந்தப் பதவிக் கனவில் மூழ்கியிருப்பவர்கள் பலர். அநுரா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க எனப் பலர் இந்தப் பட்டியலில் உள்ளனர். போறபோக்கில் அரசியல் நிலைமைகள் எவ்வாறு கோலம் மாறும் எனத்தெரியாத நிலையில், அநுரா பண்டாரநாயக்க குழம்பியிருப்பதைப்போன்று, வேறு எவரும் தற்போது குழம்பியிருப்பார்கள் என்று கூறுமுடியாது.

அக்கா சந்திரிகா - தனக்கு ஜனாதிபதிக் கதிரையில் அமரும் சந்தர்ப்பத்தை வழங்கப்போவதில்லை என்பது தெளிவான நிலையில், அவர் தற்போது தனது சுயத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

அதாவது தேர்தலின்போது முக்கிய வாக்குறுதியாக மக்கள் முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறைமை ஒழிப்பு என்ற கொள்கையை, பொ.ஐ.முன்னணியின் தலைவி சந்திரிகா தற்போது இரண்டாவது ஆட்சிக்காலத்தை நிறைவு செய்யும் நிலையிலும் நிறைவேறவில்லை.

அவர் உடனடியாகப் பதவி விலகி, கட்சிக்கு புதிய தலைமையை அறிவிக்கவேண்டும் என்று அநுரா தெரிவித்துள்ளார்.

தனது இரு ஆட்சிக்காலத்தையும் நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட ஜனாதிபதியாகவே கழித்து முடிக்கப்போகும் சந்திரிகா, மக்களுக்கான வாக்குறுதியை மீறியுள்ளார். எனவே அவர் பதவி விலகி கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கவேண்டும் எனவும், அநுரா கூறியுள்ளார்.

இது தனக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு இல்லாமல் போகிறது என்ற எரிச்சலில், ஆதங்கத்தில் அநுராவிடமிருந்து வந்த வார்த்தைகள் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே சந்திரிகாவின் மூத்த சகோதரி சுனேத்திரா, தனது தம்பி அனுரா இனவாதிகளின் வலைக்குள் சிக்கியுள்ளார் எனக் கூறியுள்ளார்.


இந்த நிலையில் அனுரா கட்சியிலிருந்து ஒதுக்கப்படுகிறார் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

அநுராவின் அடுத்த புகலிடம் ஜே.வி.பியாக இருக்குமோ என்ற சந்தேகம் சிலருக்கு எழலாம். ஆனால், ஜே.வி.பியினர் அவரை தமது அரசியல் சமையலுக்கு, கறிவேப்பிலையாகத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் உண்மை.

ஆனால், அநுராவுக்கு இது தெரியுமோ?

அந்த அளவுக்கு அவர் அரசியல் முதிர்ச்சிகொண்ட ஒருவரல்ல.

## நாடும் நடப்பும்




# பண்பாட்டுக்குப் பெயர்போன யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகள் மேலோங்கி வருகின்றன

## அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி தெரிவிப்பு

பண்பாட்டிற்குப் பெயர்போன யாழ்ப்பாணத்தில், இன்று கலாசாரச் சீரழிவு மேலோங்கி வருவதையிட்டு, நாம் அனைவரும் வெட்கப்படவேண்டும் என - அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சட்ட உதவிகள் மன்றத்தின் சட்ட ஆலோசனைக் கலந்துரையாடலில் பங்குகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - எமது யாழப்பாண சமூகம், பண்பாட்டில் உலகில் முன்னிலை வகித்த சமூகம். ஆனால், இன்று பல்வேறு கலாசார சீரழிவுகளின் மையமாக அது மாறிவருகின்றது. இதனைக் கண்டு சமூகத்தினர் உட்பட அனைவரும் வெட்கப்படவேண்டும்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, எமது நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் விளைவே இதுவென்று குறிப்பிடமுடியும். யுத்தத்தினால், எமது சமூகக்கட்டுக்கோப்பு குலைந்துவிட்டது. பல தீயசக்திகள் யுத்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, எமது சமூகக் கட்டமைப்புக்குள் தங்களை நுழைத்துள்ளார்கள்.

அரச சட்டத்தரணியாகக் கடமையாற்றிய எனது குறுகிய கால அனுபவத்தில், நாம் அறிந்த கலாசார சீர்கேடு தொடர்பான வழக்குகள் ஏராளமானவை. அவை எங்கு நடைபெற்றுஇருக்கின்றன என ஆராய்ந்தபோது - பாழடைந்த கட்டடங்களிலும், ஆள் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களிலும் என்கின்ற விடயம் புலம்பப்படுகின்றது. அந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டோர் நீதிமன்றங்களில் கூறியிருக்கிறார்கள்.

கலாசார சீரழிவுகளின் மையமாக மாறிவரும் இந்தப் பாழடைந்த வீடுகளையும், கட்டடங்களையும், அழித்துவிடவேண்டும் அல்லது திருத்தமான முறையில் கட்டிமுடிக்க வேண்டும். சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும், இந்த சீர்கேடுகளைத் தடுக்க முன்வரும்போது, நாம் சீரழிவுகளை நம் சமுதாயத்திலிருந்து முற்றாக அகற்றமுடியும்.

அண்மையில், கைதடிப் பகுதியல் நடைபெற்ற சம்பவம் ஒன்றில், சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சமுதாயத்திலே ஆதரிப்பதற்கு யாருமற்ற, பெற்றோரை இழந்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயம். இந்த சம்பவம் தொடர்பான வழக்கை நடத்துகின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தபோது, பல அதிர்ச்சியான சம்பவங்களை நான் கேள்வியுற்றேன். அவற்றை இங்கு குறிப்பிட விரும்பவில்லை.

தற்போது வளர்ந்துள்ள நாகரிகம் - எமது இளைய சமூகத்திற்குப் பல வழிகளைத் திறந்துவிட்டுள்ளது. இணையம், சினிமா எனப் பல வழிகளிலும், எமது இளைய சமுதாயம் திசை திருப்பப்படுகின்றது. பாடசாலை மாணவர்களே இந்த வகையினுள் அதிகம் அடங்குகிறார்கள். இதனைப் பெற்றோர்கள் சிலரும் கவனிக்காதுவிடுவது, ஆரோக்கியமான சமுதாயத்திற்கு வழிசெய்யாது.

அநேகமானோர் தாம் செய்தவை குற்றம் எனத் தெரியாதே பல குற்றங்களைச் செய்து, பின் தண்டனையை அனுபவிக்கின்றார்கள். எனவே, அதனை மக்களுக்கு - சட்டவியல் தொடர்பான ஓரளவு அறிவினையாவது பெற்றுக்கொடுக்க வேண்டும். இதன்மூலம் குற்றச்செயல்களை ஓரளவு தடுக்க முடியும் என நான் நினைக்கின்றேன்.

இன்றைய உலக அரங்கிலே, பெண்ணினுடைய உரிமைகள் அடக்கப்பட்டிருக்கின்றன. அறிவியல்கூடச் சில சந்தர்ப்பங்களில் அதற்குத் துணைபோய்விடுகின்றது. கருவிலே வளரும் குழந்தை - பெண் என அறிந்து, கருவிலேயே அதனைக் கொன்று விடுகிறார்கள். இது அந்தக் கருவின் அடிப்படை மனித உரிமையை மீறும்செயலாகும்.

வயது வந்த பெண்கள்கூடப் பல்வேறு வகையில் துன்புறுத்தப்படுகிறார்கள். பாலியல் துன்புறுத்தல், அலுவலகத்தில் மேலதிகாரியின் தொல்லை எனப் பலவற்றிற்கு அவர்கள் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. ஆனால், இவற்றிற்கு முகம் கொடுக்கும் பெண்கள் - இலங்கையைப் பொறுத்தவரையில், சட்டத்துறையை நாடுவது மிகவும் குறைவாகவேயுள்ளது. இந்தநிலை மாற்றம் பெறவேண்டும் எனவும் சுகந்தி கேட்டுக் கொண்டார்.

இந்தநிகழ்வில் வெளிநாட்டு நிறுவன பிரதிநிதிகள், கிராமசேவகர்கள், நிறுவனத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சமஷ்டித் தீர்வு வழங்குதல் மூலம் நாடு பிளவுபடுவதைத் தடுக்கலாம்!

## அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு சமஷ்டி முறையிலான தீர்வு வழங்கப்படுவதன் மூலம், நாடு இரண்டாகப் பிரியாது தடுக்கமுடியும் என அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

பண்டாரவளையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமைக்கு சில இனவாதிகளின் செயற்பாடுகளே காரணம் எனக் குறிப்பிட்ட அவர், தனிநாடு கோரிப் போராட்டம் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது சமஷ்டி முறையிலான தீர்வை நோக்கிச் செல்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

பிரஜாவுரிமைப் பிரச்சினை சகல அரசியல் கட்சிகளால் தீர்க்கப்பட்டது போன்று தமிழ் மக்களின் பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# குரங்குபாஞ்சான் பகுதிக்கு சிஹல உறுமய செல்லும்!

சிஹல உறுமய - திட்டமிட்டவாறு குரங்குபாஞ்சான் பகுதிக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், அரசும் இணைந்து, குரங்குபாஞ்சான் பிரதேசம் அரசுக்குச் சொந்தமானது என்றுகூறி வருகின்றன. இதையறிந்தே சிஹல உறுமய குரங்குபாஞ்சான் பகுதிக்குச் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசுப் பிரதேசம் என்ற அடிப்படையில், அமைதியான முறையில், ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல் - சிஹல உறுமய இந்தப் பகுதிக்குச் செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசிற்குச் சொந்தமான ஒரு இடத்திற்குச் செல்வதற்கும், அங்கு பேரணியாகச் செல்லுவதற்கும் அனுமதி தேவையில்லை என்றும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இணக்கத்திற்கு ஏற்ப அரசு பாதுகாப்பு தமக்கு வேண்டும் என்றும் சிஹல உறுமய கேட்டுள்ளது.

குரங்குபாஞ்சான் பிரதேசம் தொடர்பாக நடைமுறைப் பிரச்சினைகளைப் பூதாகரமாக்கும் முயற்சிகளின் ஒன்றாகவே சிஹல உறுமயவின் குரங்குபாஞ்சான் முகாம் பிரதேசத்திற்கான பயணம் அமையும் என்றும், அந்தப் பயணத்தைக் கைவிடுமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - சிஹல உறுமய கட்சியைக் கேட்டுள்ளது. (01)

# கனடிய சபாநாயகர் இலங்கை வருகை!

கனடாவின் சபாநாயகர் 'பீற்றர் லாம்ப்' இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த கனடாவின் சபாநாயகரை- இலங்கைப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திலக் மாரப்பன விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார்.

இடைக்கால நிர்வாகம் தெடர்பான திட்டவரைபு சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தக் காலப்பகுதியில், கனடா நாட்டின் சபாநாயகர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமைக்குப் பல காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (01)

# சமாதான விரோதிகள் வெற்றிபெற்றால் சர்வதேச சமூகம் என்ன செய்யும்?

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில், புதிய செயற்திட்டங்களுக்கு உதவுவதற்குத் தயாராகி வருவதாகவும், ஆனாலும் சமாதான முயற்சியின் முன்னேற்றத்தைக் கூர்ந்து அவதானித்தே, அடுத்த திட்டங்களுக்கான அங்கீகாரம் அளிக்கப்படுமென்பதும் - உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி ஆகியவை தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.



ரணில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை - இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏற்றுக்கொள்ளவில்லை. இதை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, இந்த சமாதானமுயற்சிகளைக் குழப்புவதற்கும், இதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கும் ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது தலைமையின் கீழுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியும் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்துவருகின்றன.

இவைதவிர, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியும் - பாதயாத்திரைகள், ஆர்ப்பாட்டங்கள் என்று எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதேசமயம் வேலை நிறுத்தங்களையும் தூண்டி, தொழில்துறைகளிலும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது. நாட்டின் பொருளாதாரத்தை இவ்வேலை நிறுத்தங்கள் மூலம் பாதிப்படையச் செய்து, வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச்செய்து, மக்களுக்கு அரசின்மீது அதிருப்தியை ஏற்படுத்துவதும் ஜே.வி.பியின் ஒரு திட்டமாகும்.

இதேசமயம் - கிழக்கில் இஸ்லாமியர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் மோதலை ஏற்படுத்துவதற்கு இன்னொருபுறத்தில் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் முயற்சிகள் மற்றொருபுறத்தில் தூண்டிவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. சிஹல உறுமய வேறொரு பக்கம் தனது இனவாதத்தைப் பரப்பிக்கொண்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாகசபைக்கான புலிகளின் திட்டவரைபு - அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே, அரசாங்கம் ஆட்டம் காணவேண்டுமென்பதில், எதிர்க்கட்சி தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதேசமயம் திருகோணமலைக்கு ஆபத்து. இதன்மூலம் நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்று கதிர்காமரும், எதிர்க்கட்சிகளும் கூச்சலிடுகின்றன. திருகோணமலையை இந்தியா தனது பிடிக்குள் எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை. தமிழர்கள் திருகோணமலைக்கு உரிமை கோரக்கூடாது என்பதில், எதிர்க்கட்சியினர் குறியாக இருக்கின்றனர். இவர்கள்தான் நாட்டின் மீது - தாங்கள் விசுவாசமுள்ளவர்களென்றும், நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் கூச்சலிடுகின்றனர்.

இன்னொருபுறம், நாட்டைப் பாதுகாப்பதற்குத் தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிப்பதற்குரிய தருணத்தை ஜனாதிபதி பார்த்துக் கொண்டிருப்பதாக - அவரின் தம்பியும், நாடாளுமன்ற உறுப்பினரும், இந்த நாட்டின் பிரதம மந்திரிகளாக இருந்த கணவனும் - மனைவியும் பெற்றெடுத்த அருமருந்தன்ன புதல்வர் அநுரா பண்டாரநாயக்க எச்சரித்துக்கொண்டிருக்கிறார்.

இந்தநிலையில், பேச்சுவார்த்தை மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்பதே தமது கொள்கையும், இலட்சியமும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க - அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால், பேச்சுவார்த்தையைத் தாமே, தனது எண்ணத்தின்படியே நடத்தவேண்டுமென்றும், அதிகாரப் பரவலாக்கல் என்பது தாம் 2000-ஆம் ஆண்டில் தெரிவித்த யோசனைகளின் அடிப்படையிலேயே அமையவேண்டுமென்பதும் அவர் அடிக்கடி சொல்லும் மந்திரமாகும்.

விடுதலைப் புலிகளுடன்தான் பேசித் தீர்வு காணவேண்டுமா? தமிழ் மக்களின் வேறு பிரதிநிதிகளுடன் பேசித் தீர்வுகாணமுடியாதா? என்றும், ஜனாதிபதி - இடையிடையே சொல்லி வருகின்றார்.

ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நால்வர் கூட்டணி ஒன்றும் தயாராக இருப்பது மட்டுமல்ல, இடையிடையே ஜனாதிபதியையும் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள், கிழக்கைப் பிரிக்கக்கூடாது போன்ற விடயங்கள் பற்றியும் பேசியும் வருகின்றனர்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவும் இடைக்கால நிர்வாகசபை அமைப்பதைத் தடுக்கவும், சமாதானப் பேச்சுக்கள் தொடராமல் தடுக்கவும் - எதிர்க்கட்சிகளும், பேரினவாத சக்திகளும் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கின்றன.

இந்தநிலையில் சமாதானப்பேச்சுக்கள் தொடங்கி நடந்தால்தான், நிதியுதவி அளிக்க முடியுமென்று உதவி வழங்குவதற்கு வாக்குறுதியளித்த நாடுகள் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் சமாதானப் பேச்சுக்களைத் தொடரவேண்டுமென்று விடுதலைப் புலிகளுக்கு வெளிநாடுகள் கோரிக்கை விடவும், வற்புறுத்தவும் தவறவில்லை.

பொருளாதாரம் மிகமோசமான நிலையிலிருக்கும்போது, கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு உதவிகளையும் கிடைக்காமல் செய்வதில் ஈடுபட்டிருக்கும் பேரினவாதிகளும், எதிர்க் கட்சிகளும் - தாங்கள் தேசவிசுவாசிகள் என்று வேறு பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

நாடு எப்படிப் போனாலும், அந்நியர் எவர் வந்து திருகோணமலைக்கு உரிமை கொண்டாடினாலும் பரவாயில்லை. தமிழர்கள் இங்கு உரிமையோடு வாழக்கூடாது, வாழவிட முடியாது என்பதே எதிர்க்கட்சிகளினதும், பேரினவாதிகளினதும் ஒரே நோக்கமாக உள்ளது.

விடுதலைப் புலிகள் அரசிடம் கையளிக்கவிருக்கும் இடைக்கால நிர்வாகசபைக்கான கட்டமைப்பை, ரணில் அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தால் என்ன நடக்கும்?.

விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கும் திட்டவரைபில் முக்கியமான அம்சங்களில் திருத்தம் செய்யவேண்டுமென அரசு வற்புறுத்தினால், அதை ஏற்கமுடியாதெனப் புலிகள் பிடிவாதமாக இருந்தால் என்ன நடக்கும்?

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்டவரைபை ஏற்கக்கூடாதென எதிர்க்கட்சியினரும், பேரினவாதிகளும் பொரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி, நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தினால் விளைவு எப்படி இருக்கும்?

இப்படியொரு நிலைமை ஏற்பட்டால், விடுதலைப் புலிகள் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கமுடியுமா?

நாட்டில் ஒரு தலைப்பட்சமாகப் போரை நிறுத்தி, பேச்சுவார்த்தைக்கு வழி வகுத்தவர்களே விடுதலைப்புலிகள்தான்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்தை மூலம் தீர்வுகாண்பதற்கு முன்வந்து, வழிகாட்டியதும் விடுதலைப் புலிகளே?

தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடாக, சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பதற்கு முன்வந்தால், அது பற்றிப் பரிசீலிக்கத் தயார் என்று, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சொன்னதற்கிணங்க, ஒஸ்லோ மாநாட்டில் சமஷ்டி அமைப்புக்கு இரு தரப்பும் ஒப்புகொள்வதற்குக் காரணமாக இருந்ததும் விடுதலைப் புலிகளே.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, அதுவும் தமிழ் மக்களின் தியாக பூமியில் - படையினர் மூலை முடுக்குகளிலெல்லாம் முகாம்களும், அரண்களும் அமைத்து, ஆயுதங்களுடன்



திரிந்து, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கிய போதும் - பொறுமையாக விடுதலைப் புலிகள் சமாதானத்தைக்கடைப்பிடித்து வருகிறார்கள்.

முஸ்லிம்கள் ஒருபுறம் - புலிகள் மீது பழி சுமத்தி, ஆர்ப்பாட்டம் செய்வதுடன், ஆயுதம் தாருங்கள், ஆயுதந் தாருங்கள் என்று வேறு கூச்சல் போட்டு, ஆத்திரத்தையூட்டிய போதிலும், விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

இந்தநிலையில், இந்த எதிர்ப்புச் சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்புக்கு, விடுதலைப்புலிகள் முன் வைக்கும் யோசனைகளை - அரசாங்கம் நிராகரிக்க வேண்டுமென நிர்ப்பந்தித்தால்...

**எஸ்.எம்.ஜி**

நாடாளுமன்றத்தையும், ரணில் அரசையும் தனது நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கலைத்து, நாட்டின் நிர்வாக அதிகாரத்தை அவரே கையில் எடுத்துக்கொண்டால்...

புதிய தேர்தல் நடந்து, புதிய அரசு பதவியேற்கும் வரையில், ஜனாதிபதியே ஆட்சியை நடத்த முன்வந்தால், முப்படைகளும் - விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போருக்கு ஏவி விடப்பட்டால்...

உலக நாடுகள் அல்லது சர்வதேச சமூகம் என்ன செய்யும்?

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கு உதவ முன்வந்த நாடுகள் என்னசெய்யும்?

அப்பொழுதும் அமெரிக்காவைப்போல், விடுதலைப் புலிகளை இன்னமும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திக்கொண்டிருப்பார்களா? அல்லது நியாயப்படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும், ஆசியும் வழங்குவார்களா?.

---

# புன்னாலைக்கட்டுவன் மருந்தகம்

கிராமப்புற மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளுள் மிகவும் முதன்மையானது மருத்துவ சேவையாகும். அரசாங்க வைத்தியசாலைகளுடைய இலவச மருத்துவசேவை, இம் மக்களுக்கு பயனுறுதித்தன்மை வாய்ந்ததாகும் இதன் காரணமாகவே முன்னைய காலங்களில் கிராமங்கள்தோறும், அரசாங்க வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன.



மருந்தகக் கட்டடம்

இவ்வாறு நிறுவப்பட்ட கிராமிய வைத்தியசாலைகளுள்- புன்னாலைக்கட்டுவன் கிராமிய வைத்தியசாலையும் ஒன்றாகும். ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு முன்னர் - தனியார் கட்டடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டு, அன்று தொடக்கம் இன்றுவரை வைத்தியசாலை அளப்பெரிய சேவையை ஆற்றிவருகின்றது.

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், மயிலங்காடு, ஈவினை, திடற்புலம், குட்டியப்புலம், அச்செழு மற்றும் மத்தாளோடைப் பிரதேச மக்களுக்கு, இந்த மருந்தகமே மத்திய மருந்தகமாக விளங்குகின்றது. அத்துடன், தாய்சேய் நல சிகிச்சைகள் நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப காலத்தில் வைத்தியர்கள் - இங்குள்ள விடுதியிலேயே தங்கியிருந்து சேவையாற்றினர். தற்பொழுது இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை. ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே ஒபந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்றார்.

இந்தநிலையிலும், இங்கு கடந்த கால வைத்தியசாலை புள்ளிவிபரங்களின்படி, ஒவ்வொரு வருடமும் 10000 இற்கு மேற்பட்ட நேயாளர்கள் மருத்துவ சேவையைப் பெற்று வந்துள்ளனர்.

2500 இற்கும் மேற்பட்ட தாய் சேய்கள், கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்நிலையில், வைத்தியசாலையின்சேவை - மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்குமா என்ற ஏக்கம் இந்தப்பிரதேச மக்களிடையே பரவலாக்கக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்ற தனியார் கட்டடம், காணியோடு பிறிதொருநபருக்கு விற்கப்பட்டுள்ளமையாகும்.

# தொடர்ந்தும் இயங்குமா?

இதனால், வைத்தியசாலையின் இருப்பே கேள்விக் குறியாகிவிட்டது.

இக்காணி விற்கப்படுவதற்கு முன்னரே - முத்துக்குமாரன் செல்லப்பா என்ற தனிநபரால், இந்த வைத்தியசாலையை நிரந்தரமாக அமைப்பதற்கு பத்து இலட்சம் ரூபா பெறுமதியான, 10 பரப்புக்காணி நன்கொடையாக கையளிக்கப்பட்டது.

ஆனால், இக் காணியில் நிரந்தர கட்டடம் அமைக்கவென, எது வித நடவடிக்கைகளும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. வைத்தியசாலை அமைப்பதற்குரிய மதிரி வரைபடம் - இரண்டு வருடங்களுக்கு முன்பே தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால், இங்குள்ள சனசமூகநிலையத்தினரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில், கணேச சனசமூக நிலையத்தினர் - புனர்வாழ்வு, புனரமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவிற்கும், தமிழர் தேசிய கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜர்கள்மூலம், வைத்தியசாலையின் நிலையைத் தெரியப்படுத்தி, கட்டடப் பணி அமைப்பதற்கு சாதகமான பதிலை எதிர்பார்த்தனர்.



அன்பளிப்புச் செய்யப்பட்ட காணி.

இவ்வேளையில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பதில் அனுப்பியிருந்தார். வீ .ஆனந்தசங்கரி நேரில் பார்வையிட்டு, வைத்தியசாலையை விரைவில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் கூறிச் சென்றார். ஆனால், உரிய நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

கடந்தகால அபிவிருத்திகளில் பெருமளவு நிதியினை கண்டபடி கொட்டிச் செலவுசெய்ய. ஆட்சியாளர்கள் தற்போது முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளில், இக் கிராம வைத்தியசாலைக் கட்டடத்துக்கும் முக்கிய இடம்கொடுத்து, நிரந்தர கட்டடம் அமைக்க ஆவன செய்யவேண்டும்.

இக்கட்டட வேலையை உடன் ஆரம்பிப்பதற்கு, உரிய அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கைக் காட்டாது, முன்வந்து செயற்படுவதன் மூலம் - இப்பிரதேச மக்களுக்குத் தொடர்ந்து மருத்துவ சேவை யை வழங்கமுடியும். இல்லையேல், இவர்களுக்கு மருத்துவ சேவை என்பது கானல் நீராகிவிடும். இதற்குரிய அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

**கிருபா**

# தலை ஒட்டிப் பிறந்த சிறுவர்களின் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக அறிவிப்பு!

எகிப்தைச் சேர்ந்த தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களான மொஹமட், அஹமட் ஆகியோரைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களைப் பிரித்தெடுப்பதற்கான சத்திரசிகிச்சைகள் தொடர்ச்சியாக 30 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சை மூலம் தன் குழந்தைகள் பிரிக்கப்பட்ட சந்தோஷமான செய்தியை அறிந்த தந்தை இப்ரஹாம் ஓடிச்சென்று சந்தோஷ மிகுதியால் வைத்தியர்களை கட்டியணைத்து முத்தமிட்ட பின்னர் மயங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர்கள் குழு நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் - தாம் எதிர்பார்த்தது போலவே சத்திர சிகிச்சை வெற்றியளித்தாலும், இரு சிறுவர்களும் இன்னும் ஆபத்தான கட்டத்தை தாண்டவில்லை என்று தெரிவித்தனர்.

இச்சிறுவர்களது மூளையில் வீக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, தொடர்ந்தும் பல நாட்கள் இவர்களை கோமா நிலையில் வைத்திருக்கவுள்ளதாக வைத்தியர்கள் மேலும் தெரிவித்தனர்.

சத்திரசிகிச்சை மேற்கொண்ட பகுதிகளில் ஏற்பட்ட தசை, மண்டையோடு இழப்புகளை ஈடுசெய்வதற்கு பல வருடங்கள் செல்லலாம் என வைத்தியர்கள் மேலும் கூறினர்.

அதேவேளை,

இச்சிறுவர்களது சத்திரிசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட செய்தியை அறிந்த கீறிசைச் சேர்ந்த நான்கு மாதங்களேயான ஒட்டிப்பிறந்த இரு பெண் குழந்தைகளைப் பிரிக்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பலஸ்தீன பிரதமர் அஹமட் கூரே பதவி விலகப்போவதாக அறிவிப்பு!

## அரபாத்தின் தலையீடுகளே காரணமாம்



கடந்த செவ்வாய்க்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே - தான் மூன்று கிழமைகள் மாத்திரமே பதவிவகிக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சை நாசார் யூசெபிற்கு வழங்குமாறு அரபாத் அழுத்தம் கொடுத்திருந்தார். அரபாத்தின் இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் - தன் நாடாளுமன்ற கௌரவத்தை பாதிக்கும் என்பதாலேயே, பிரதமர் அஹமட் கூரே தொடர்ந்தும் பதவியில் இருக்கவிரும்பாமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பலஸ்தீனத்தின் பாதுகாப்பு அதிகாரங்கள் அடங்கிய பதவியான உள்நாட்டமைச்சை - நாசர் யூசெபிற்கு வழங்குவதற்கு அரபாத் முயற்சிகள் மேற்கொண்டபோதும், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டால் மாத்திரமே தான் அப்பதவியை ஏற்பேன் என்று நாசார் யூசெப் தெரிவித்துள்ளார். இதனால், அரபாத் ஆத்திரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, உள்நாட்டமைச்சர் பதவிக்கு அரபாத்தின் 'பாத்தா' அமைப்பின் அதிகாரியான சுகம் பலாவி என்பவரை தெரிவுசெய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

## உலக நோக்கு

### ஈராக்கில் நடைபெற்ற போரின்போது

# இரு கைகளையும் இழந்த சிறுவனுக்கு செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டன



ஈராக்கில் நடைபெற்ற போரின்போது இரு கைகளையும் இழந்த அலி இஸ்மயில் அபாஸ் என்ற 13 வயதுச் சிறுவனுக்கு செயற்றைக் கைகள் லண்டன் குயின்மேரி வைத்தியசாலையில் பொருத்தப்பட்டன.

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலின்போது, இந்தச் சிறுவன் தன் இரு கைகளையும் இழந்ததுடன், பெற்றோர் மற்றும் சகோதரனுடன் 13 உறவினர்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டமை குறித்து சிறுவன் அபாஸ் கூறுகையில்,

தனது ஆறு சகோதரர்கள் தற்போது பக்தாத்தில் வசிப்பதாகவும், தன்னுடைய கைகள் நன்றாக இருப்பதை தன்னால் உணரக்கூடியதாக உள்ளதாகவும், எனினும் தனது கைகள் பார்ப்பதற்கு அழகாக இல்லை என்றும் தெரிவித்தார்.

'தனது குடும்ப அங்கத்தவர்களை தனது கைளால் கட்டியணைக்கப் போவதாகவும், தானே பல்துலக்கப் போவதாகவும், தன்னுடைய முகத்தை தானே கழுவப் போவதாகவும்' சிறுவன் தன் ஆசைகளைத் வெளியிட்டுள்ளான்.

கைதுண்டிக்கப்பட்ட இடத்திலுள்ள தசைகளில் ஏற்படும் கணத்தாக்கத்திற்கு ஏற்ப செயற்கைக் கைகள் தொழிற்படக்கூடியவாறு, சிறியளவிலான மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால், இந்தச் செயற்கைக் கைகளை அசைக்கக்கூடிய வகையிலும் விரல்களை மூடித்திறக்கக் கூடியவகையிலும் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும்!

## ஜோர்தானிய மன்னர் தெரிவிப்பு

ஈராக்கை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாடுகள் தமது ஆதரவைத் தெரிவிப்பதோடு, அதில் பங்குகொள்வதற்கும் முன்வரவேண்டும்.

இவ்வாறு, மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமிய உச்சிமாநாட்டில் உரையாற்றிய ஜோர்தானிய மன்னர் அப்துல்லா தெரிவித்தார்.

துருக்கியோ அல்லது ஜோர்தானோ ஈராக்கின் விவகாரங்களில் தலையிடமாட்டாது எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# நேபாள பொலிஸ் பயிற்சியகம் மீது மாவோ தீவிரவாதிகள் தாக்குதல்!

## 15 தீவிரவாதிகள், 12 பொலிஸார் பலி



நேபாளத்தின் பொலிஸ் பயிற்சியகத்தின் மீது ஞாயிற்றுக்கிழமை மாவோ தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து - மாவோ தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற கடும் சண்டையில் - 15 மாவோ தீவிரவாதிகளும், 12 பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

அதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற பல தாக்குதல் சம்பவங்களில் மேலும் 13 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக, நேபாள பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 38 இல் இருந்து 50 பேராக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பல்வேறு மோதல்களில் 90 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

# அரபாத்துக்கு குடல்நோய்; தற்போது பூரண சுகமாம்!

## பிரார்த்தனைகளிலும் கலந்துகொண்டார்

பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் - குடல் நோய், ஜுரம் ஆகிய நோய்களின் தாக்கத்தால் அவதியுற்றதாகவும், தற்போது அவர் பூரணசுகம் அடைந்துவிட்டதாகவும், அவருக்கு சிகிச்சை அளித்த எகிப்திய மருத்துவர்கள் தமது நாட்டிக்கு திரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

74 வயதுடைய அரபாதுக்கு - குடல் புற்றுநோய், இருதயநோய் ஆகிய நோய்கள் ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகள் தவறானதென பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரபாத் - வெள்ளிக்கிழமை பிரார்த்தனையில் கலந்துகொண்டதாகவும், எவரது உதவியுமின்றி பிரார்த்தனையில் அவர் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊர்சுற்றி எழுதுவது

போர்நிறுத்தம் என்றால் என்ன?

போரை நிறுத்தி வைத்திருக்கும் இருதரப்பும் - அடுத்தபோருக்கு தம்மைத் தயார்படுத்தும் இடைக்கால ஓய்வு. இது ஒரு பொதுவான வரைவிலக்கணம்.

இந்த ஓய்வு நீடிக்கும்போது - 'இவர் நோண்டினார், அவர் சுறண்டினார்' என்று ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டத் தொடங்குவார்கள். பின்னர் அவர்தான் முதலில் தொடங்கினார் என்று ஒருவரை ஒருவர் சாட்டுச்சொல்லி - இறுதியில் போர்நிறுத்தம் செல்லுபடியற்றதாகி, இருதரப்பும் மீண்டும் மோதத் தொடங்கிப் போர் தொடரும்.

இலங்கையில் இப்போதுள்ள போர்நிறுத்தம் எப்படி?

தமிழ்மக்களின் தாயக நிலப்பகுதியில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்று சொல்லப்படும் இடங்களில், புதிதுபுதிதாகவும் பல இடங்களில் இராணுவக் காவலரண்கள் நிறுவப்பட்டு, பலப்படுத்தப்பட்டுவருகின்றன. ஆலயங்களுக்கு முன்னால்கூட மண்மூடைகள் அடுக்கி, துப்பாக்கி ஏந்தி, குறிபார்த்தபடி இராணுவத்தினர் காவல்காத்து நிற்பதைக் காணலாம்.

இராணுவ வாகனங்கள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட கவச வாகனங்கள், டிரக் வண்டிகள், ஆயுதபாணிகளான இராணுவத்தினருடன் செல்லும் ஜீப் வண்டிகள், லொறிகள் இரவு பகலாக இப்பகுதிகளிலுள்ள வீதிகளில் வேகமாகவும், வேகம் குறைந்தும் நடமாடித்திரிவதைக் காணலாம்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - விடுதலைப் புலிகள் ஆயுதம்தரிக்காமலும், சீருடை இல்லாமலும் - தங்களுடைய சமூக (அரசியல், கலை, பண்பாட்டு) நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அப்படியானால், இருதரப்பும் மோதிக்கொள்ளும் வாய்ப்பு அதிகமில்லையென்று சொல்லலாமல்லவா? இருதரப்பும் போருக்கு ஆயத்தம் செய்தால்தானே மோதலுக்குச் சந்தர்ப்பம் ஏற்படும்?

ஆனால், விடுதலைப் புலிகள் தாக்குதலுக்கும், போருக்கும் ஆயத்தம் செய்வதாக - எதிர்க்கட்சியினரும், பேரினவாதிகளும் மட்டுமல்லாது, அரச படையினரும் குற்றஞ்சாட்டிவருகின்றார்கள்.

இதேசமயம், அரசாங்க அமைச்சர்களும் - தாங்கள் புலிகளின் எந்தத் தாக்குதலையும் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் சொல்லிக்கொள்கிறார்கள். இதேசமயம் - வெளிநாடுகளில் ஆயுதங்கள் வாங்குவதிலும் அமைச்சர்கள் ஈடுபட்டுவருகிறார்கள்.

வெளிநாட்டு அரசுகள் உதவிக்குவருமென்ற ரீதியில் - பிரதம மந்திரி கூட ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாடுகளுடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராக வலைப்பின்னல் ஒன்றைச் செய்திருப்பதாகவும் பிரதமர் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் பல நாடுகளுக்கும் சென்று, சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் - அரசிடம் இம்மாதத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்கால நிர்வாகசபைக்கான கட்டமைப்புப் பற்றிய திட்டத்திற்கு, அரசு என்ன பதில் சொல்லப்போகிறது.

இடைக்கால நிர்வாகசபை அமைப்பது உறுதி என்று ஒரு அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறாரே!

இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டால்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்க முடியும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கினால்தான் - ரோக்கியோ மாநாட்டில் உதவிவழங்கும் நாடுகள் உறுதியளித்த கோடிக்கணக்கான ரூபாய் கிடைக்கும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், பாதுகாப்பு வலயங்களின் நிலை என்ன? இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தின் நிலையென்ன?

எல்லாவற்றிற்கும் இடைக்கால நிர்வாகசபைதான் பதில்சொல்லும்.

முஸ்லிம்கள் - பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பாக பங்குகொள்ளவேண்டும் என்ற கோரிக்கைக்குப் பதி[illegible]ன?

எல்லாவற்றிற்குமே இடைக்கால நிர்வாகசபைதான் பதில்.

எதிர்க்கட்சிகளும், பேரினவாதிகளும் இடைக்கால நிர்வாகசபை அமைப்பதை எதிர்த்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினால், ரணிலின் அரசைக் கலைத்தால் என்ன நடக்கும்?

அவர்களாகவே தமிழ்மக்களுக்கு சுயாட்சி கிடைக்கச் செய்துவிடுவார்கள்.

**(மேலே கண்ட சம்பாஷனை பொதுமக்கள் இருவருக்கிடையில் நடந்தவை. இது உங்களுக்கு அர்ப்பணம்.)**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின் செயற்பாடுகளில், அக்கூட்டணி அமைப்பிலுள்ள கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள் எனவும், அவர்கள் மீண்டும் தங்களின் தாயகக் கட்சியான தமிழரசுக் கட்சிக்கு புத்துயிர் அளிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கூட்டணி உருவாக்கப்பட்டதன் நோக்கம், ஒன்றிணைந்து உரிமைக்காகப் போராடவேண்டும் என்பதேயாகும். ஒரு நோக்கத்துடன் உருவான கூட்டணி, பின்னர் காலப்போக்கில் பலநோக்குக் கூட்டணியாக - இலக்கற்று, அவரவர் அபிலாஷைகளுக்கு ஏற்ப இயங்கத் தொடங்கியது பரிதாபமே...

மக்களின் எதிர்பார்ப்பை உதாசீனம் செய்துவிட்டு, கூட்டணியானது யார்யாரோ அபிலாஷைகளுக்கு எல்லாம் இழுபட்டு, அல்லாடி அலைந்தது வரலாற்று அவமானமாகும்.

இப்போது சமஷ்டி, தன்னாட்சி என்றெல்லாம் பேசப்படும்போது, 'தமிரசுக்கட்சி'க்கு உயிரூட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது.

'இனியாவது தந்தையின் கனவை மைந்தர்கள் நிறைவேற்ற முயல்வார்களா என்று பார்ப்போம்' என்கிறார் முன்னாள் தமிழரசுக் கட்சித் தொண்டர் ஒருவர்.

-தெருவாசி



# மக்கள் அன்றாட நடவழக்கைகளுக்கு திரும்ப அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மக்கள் தமது அன்றாட வாழ்க்கைக்கு திரும்புவதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டு படையினர் நடந்துகொள்வது குறித்து, வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புரிந்துணர்வு உடன்படிக்கையும், அதையடுத்த காலப்பகுதியும் எமக்கு பெரும் நம்பிக்கையைத் தந்திருந்தது. ஆனாலும், புரிந்துணர்வு உடன்பாட்டில் நடைமுறைக்கு வரவேண்டியதாகக் குறிப்பிட்ட அநேக விடயங்கள், நடைமுறைக்கு வருவதற்கு படையினர் இடையூறாக இருந்துவருவதை - நாமும், ஏனைய மக்கள் நலன் அமைப்புக்களும் சுட்டிக்காட்டி வருகின்றது.

இப்போது எழுந்துள்ள புதிய பிரச்சினை - வீதியில் இராணுவ வாகனங்களால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களாகும். இது உண்மையில் விபத்தா அல்லது விபத்துப் போன்று தோற்றும் அமைதியைக் குழப்புவதற்கான நடவடிக்கையா என, பலரும் கேள்வியெழுப்பும் நிலையுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தமது அன்றாட கல்வி நடவடிக்கைகளுக்கு நடமாட அஞ்சுகின்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயிருக்குப் பயந்துகொண்டு கல்விகற்கச் செல்லுகின்ற அவல நிலையைப் போக்கவேண்டும். வீதியினை அச்சமின்றிப் பயன்படுத்தும் உரிமை பேணப்படல்வேண்டும்.

வேதனையிலும் வேதனையான விடயம் - விபத்துக்களின் பின்னர் நியாயத்தைத் தட்டிக்கேட்க முற்படும் மக்களை, ஏதோ கலகக்காரரை அடக்குவது போல, மிலேச்சத்தனமாக - தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டுவீச்சு என தாக்கியடக்க நினைப்பதானது கண்டனத்திற்குரியது. மேலும் தமிழ்[illegible]கள் உணர்வுகளுக்கு மதிப்பளியா[illegible] அடக்க முற்பட்டதன் விளைவே, தமிழினம் தனித்துவாழ முடிவெடுக்கும் நிலைக்கு இட்டுவந்தது என்ற வரலாற்று உண்மையை அரசு புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

மேற்குறித்தவாறான சம்பவங்களில் மாணவர்கள் தாக்கப்படுவது, கைதுசெய்யப்படுவது எமது கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயலாகவே கருதப்படுகின்றது. குறிப்பாக - மாம்பழம் சந்திப் பகுதி விபத்துக்களையடுத்து, மாணவர்களைக் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் செயலானது வன்மையான கண்டனத்துக்குரியது. மேலும் அவர்களைத் தடுத்துவைத்திருக்காது, உடன் விடுதலை செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

இனிமேலும் இவ்வாறான அச்சுறுத்தல்களிலிருந்து நாம் விடுபட - மனித உரிமைக்காகவும், மா[illegible]வர் கல்வி உரிமைக்காகவும் கவலை[illegible] கொள்வதாகக் கூறும் மனிதநேய அமைப்புக்கள் உழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் தற்போது விடுவிக்கப்பட்டு இருக்கின்றது!

## திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை)

நீண்டகாலமாக அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட திரியாய் பிரதேசம் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கிராமத்தில் மக்கள் குடியேறுவதைத் தடுக்க படையினர் பல வழிகளில் பயமுறுத்தி வந்துள்ளனர். முதலில் இங்கு செல்லமுடியாது எனத் தடைவிதித்தனர். பின்னர், கண்ணிவெடிகள் இந்தக் கிராமத்தை சுற்றி வைக்கப்பட்டுள்ளதாகப் பயமுறுத்தினர், இத்தடைகளை எல்லாம் மீறி இன்று நாம் மக்களை மீளக்குடியமர்த்தி வருகின்றோம்.

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.திலக் திரியாயில் வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திருகோணமலை தமிழர் புனர்வாழ்வு கழகம் - திரியாய் கிராமத்தில் அமைத்துக்கொடுத்த 10 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு - ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திலக் அங்கு தொடந்து உரையாற்றுகையில், எமது நிலம் பறிபோகாது இருக்கவேண்டுமானால், வசதி வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும், அதைப் பொருட்படுத்தாது நிலங்களை உரிமையாக்கிக்கொள்ள வேண்டியதுடன், குடியேறிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், எமது மண்ணை நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். பல்வேறு விதமான தடைகளை எதிர்நோக்கி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திரியாயில் 10 வீடுகளை அமத்துக்கொடுத்துள்ளது. இங்கு எந்தத் தொண்டு நிறுவனமும் வேலை செய்வதற்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடைவிதிக்கமாட்டாது. ஏனைய தொண்டர் நிறுவனங்கள் சுதந்திரமாக இங்கு தமதுசேவைகளை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (03)

# காஞ்சிரங்குடா படைமுகாமுக்கு அருகில் மக்கள் குடியேறுவதற்கு அனுமதி மறுப்பு!

## பத்து குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன

(அம்பாறை)

அம்பாறை - காஞ்சிரங்குடாவில் மீளக் குடியேறியோரில் பத்து குடும்பங்களை தமது முகாமிற்கு அருகில் குடியேற வேண்டாம் என படையினர் கூறி அகற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அப்பகுதியிலுள்ள ஏனைய குடும்பங்களும் படையினரின் அச்சுறுத்தலுக்கு இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் அனர்த்தம் காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு காஞ்சிரங்குடா கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்த 176 குடும்பங்களில் 40 வனக்குறவர் குடும்பங்கள், கள்ளியந்தீவு கிராமத்தில் 13 வருடங்களாக குடியிருந்து சமாதானச் சூழலையடுத்து போட்டாக்குளம் பகுதியில் குடியேறினர். மீதமாக இருந்த 136 குடும்பங்களும் காஞ்சிரங்குடாவில் குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 16 குடும்பங்களின் குடிமனைகளில் படையினர் முகாம் அமைத்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

# வழிபட்டுக் கொண்டிருந்த வயோதிபரை வாளால் வெட்டிக் கொல்ல முயற்சி!

ஆலயத்தில் வழிபட்டுக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவரை, இராணுவப் பாதுகாப்புடன் வந்த மற்றொரு நபர் வாளால் வெட்டிக் கொலை செய்ய முயன்ற சம்பவம் ஒன்று, உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிக்கி, படுகாயமடைந்த அதே பகுதியைச் சேர்ந்தவரான ச.சிவஞானம் (வயது 73) அயலவர்களால மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, படையினரின் பாதுகாப்புடன் இயங்கும் குறித்த நபர்-தம்மை வாளால் வெட்ட வந்ததாக, அதே பகுதியைச் சேர்ந்த இரு மாணவர்கள் விடுதலைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியற்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனிடையே, குறித்த நபரது குடும்பத்துக்கு பாதுகாப்பு வழங்குவதாகக்கூறி, மக்கள் குடிமனைப் பகுதிகளுக்கிடையே படையினர் இரவு பகலாக நடமாடுவதாக, இப்பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்-போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு- நேரில் சென்று, நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் - படையினரது நடவடிக்கைகளால் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் அச்சநிலை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை ஆகியவற்றுக்கும் மகஜர்களை அவர்கள் கையளித்துள்ளனர். (202)

## சம்பள உயர்வு குறித்து ஆராய விசேட குழு

அரச ஊழியர்களின் சம்பள் உயர்வு தொடர்பாக, ஆராய்ந்து விதப்புரை செய்வதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க திறைசேரி தீர்மானித்துள்ளது. இந்தக் கு[illegible] விடம் தமது சிபார்சுகளை அடு[illegible] மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக, நிதியமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்படும்.

## குடும்பப் பெண் மீது...

தனது மனைவியை நீண்ட நேரமாகியும் காணவில்லை எனத் தேடிவந்த கணவன், படையினருடன் மனைவி போராடிக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் ஆத்திரமடைந்து, ஆயுதமில்லாது நின்ற இரண்டு படையினரையும் தாக்கியுள்ளார். இதன்போது, படையினர் இருவரும் சவுக்கங்காட்டுக்குள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, மணற்காட்டிலுள்ள படைமுகாமில் முறையிட்டபோதும் - தமது படைமுகாமைச் சேர்ந்தவர்கள் இந்தச் செயலில் ஈடுபடவில்லை எனவும், இது தொடர்பாக, வேறு படைமுகாமில் சென்று முறையிட்டால், அதற்குப் பின்னர் படையினரால் ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளுக்குத் தாம் பொறுப்பில்லை எனவும், படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 9

## ஆக்கபூர்வமான திட்ட...

கொழும்பு வந்திருந்த இந்து சமுத்திரக் கரையோர நாடுகளின் இராஜதந்திரிகள் மத்தியில், அவர் நேற்று உரையாற்றியபோதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு கிடைக்கப்பெற்றதும், அரசாங்கம் பதில் வழங்கும் என்று ,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணும் கடப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.

சர்வதேச சமூகம் இந்த விடயம் தொடர்பாக பெரும் ஆர்வம் கொண்டிருக்கிறது.

இந்து சமுத்திர ஐரோப்பிய நாடுகள் வெறும் பாரம்பரிய அமைப்பாக மட்டும் இருக்கக்கூடாது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

## தமிழக வீதி...

உயிரிழந்த இந்திராணியின் ம[illegible]ளான சர்மிளா விபத்தில் படுகாயமடைந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

விபத்தில் உயிரிழந்த கதிரவன் சென்னையில் பயண முகவராகச் செயற்பட்டவர் என்றும், இவரது குடும்பத்தினர் கொழும்பில் தமது தந்தையாரின் மரணச்சடங்கை முடித்துத் திரும்பிய இந்திராணியை, திருவனந்தபுரத்திலிருந்து அழைத்துவரச் சென்றதாகவும், இதன்போதே- இந்த விபத்து நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெளியுறவு...

கொள்வதுடன், இங்கு யாழ். அரச அதிபர், அரச சாற்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பல தரப்பினருடன் யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவார். (01)

## பொலிஸ் மா அதிபர்...

இருக்கிறது.

இதைவிட - பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான காமினி ரந்தெனிய, இந்திரா சில்வா, ஜெயசேகர ஹேரத் ஆகியோரின் பெயர்களும் பட்டியலில் உள்ளன.

அரசியல் யாப்பு மன்றம், இவர்களில் ஒருவரின் பெயரை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதேவேளை, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு பிரியாவிடை அளிக்கும் வைபவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)

## ஈ.பி.டி.பி பொறுப்...

தெரிவித்தார்.

2000ம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதியன்று பொதுத்தேர்தல் சட்டவிதிகளை மீறி தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களுடன் கூட்டமொன்றை நடத்திய குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்காக, கடந்த மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகாததனால் ஈ.பி.டி.பி பொறுப்பாளர் பரணீதரன் பிரதீபன் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மடத்தடி...

விசாரணைகளின்போதே, இவருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

இராணுவ அதிகாரி ஒருவரின் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்ட வாகனச் சாரதி, விசாரணைகள் முடிவடையும் வரை தொடர்ந்தும் குறிப்பிட்ட முகாமில் தங்கியிருக்க வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகள் - எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## யாழ்.மாவட்டத்திற்கான மணல்மண் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்தல்

கடந்த காலங்களில் மணல் மண் பலதரப்பட்ட விலைகளில் விற்கப்பட்டு வந்தது அனைவரும் அறிந்ததே. 15-10-2003 ஆம் நாளிலிருந்து பாவனையாளர் நலன் கருதி மணல் மண்ணின் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து ஆகக்கூடிய விற்பனை விலையாக கீழ்க்குறிப்பிடப்படும் விலைகளில் விற்பனை செய்யப்படும். இவற்றை எமது சங்கமூடாகச் செய்யவுள்ளதால் எமது சங்கத்தில் இதுவரை பதிவினை மேற்கொள்ளாத பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரும் இந் நாளிற்கு முன் பதிவுகளை மேற்கொண்டு எமது நடைமுறைகளுக்கு அமைவாக மணல் மண்ணை ஏற்றி இக்கட்டுப்பாட்டு விலையில் விற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 01.ஆற்றுமணல் :- | லேடன் | (4 உழவு இயந்திர சுமை - | 18500/= |
| | இசுசு | (3 உழவு இயந்திர சுமை - | 14500/= |
| 02.மணற்காட்டு மணல் :- | | 01 உழவு இயந்திர சுமை - | 3000/= |
| | | 03 உழவு இயந்திர சுமை - | 9000/= |
| | | 04 உழவு இயந்திர சுமை - | 12000/= |

மேற்படி கட்டுப்பாட்டு விலையானது சகல தரப்பினருடனும் கலந்தோலோசித்து எடுக்கப்பட்ட முடிவாகும்.

215, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(501)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.